பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 04 சனிக்கிழமை (20.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :267

# ஒப்பந்த நடைமுறை தொடர்பாக அரசுடன் பேச புலிகள் இணக்கம்

## நோர்வே அழைப்பை புலிகள் ஏற்றனர் ஒஸ்லோவில் இருவாரங்களில் பேச்சு

லண்டன், ஓகஸ்ட் 20

**போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் விடயம் தொடர்பாக வெளிநாடொன்றில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர். இதுவிடயத்தில் நோர்வே விடுத்த அழைப்பை புலிகளின் தலைமை ஏற்றுக்கொண்டுள்ளது என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார். அடுத்த இருவாரங்களுக்குள் ஒஸ்லோவில் இந்தப் பேச்சு நடைபெறும். இரு தரப்பினதும் உயர்மட்டக் குழுக்களும் இந்தப் பேச்சுகளில் கலந்துகொள்ளவுள்ளன.**

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுகள் கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தடைப்பட்டன. அதன் பின்னர் போர்நிறுத்த உடன்படிக்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வந்தது. உடன்படிக்கை மீறப்படுவதாக அரசு, புலிகள் இரு தரப்புகளுமே மாறிமாறிக் குற்றஞ்சாட்டிவந்தன. இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று ஜனாதிபதியும் வலியுறுத்திவந்தார்.

கடந்தவாரம் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அரசு இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தியது. புலிகளுடன் அவசரமாக நேரடிப் பேச்சு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு நோர்வேப் பிரதமர் பொண்டேவிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்திருந்தார்.

இதற்கிடையே, கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வந்திருந்த நோர்வே வெளிவிவகார அமைச்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தனபால - ஹெக்லண்ட் திங்களன்று சந்திப்பு!

கொழும்பு, ஓக.20

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்டிற்கும் இடையிலான முக்கிய பேச்சுகள் எதிர்வரும் திங்கட்கிழமை அரச சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளன.

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றி கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுகள் தொடர்பில் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளருக்கு இந்தச் சந்திப்பின்போது தான் விளக்கவுள்ளார் என கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக் ரப் ஹொக்லண்ட் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாகப் பேணுவது தொடர்பில் விடுதலைப் புலிகள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றி ஆராய

## மூத்த இராஜதந்திரி ஒருவரை இங்கு அனுப்புகிறது இந்தியா!

கொழும்பு, ஓக.20


இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து நேரில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென மூத்த இராஜதந்திரியொருவரை இலங்கைக்கு அனுப்புவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி இந்தியாவின் மூத்த இராஜதந்திரியும், பிரதிப் பாதுகாப்பு ஆலோசகருமான விஜய் நம்பியார் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார். இலங்கையின் கள நிலைவரம் தொடர்பில் முக்கியமான பேச்சுகளை அரசியல் தலைவருடன் நடத்தும் அவர் முக்கியமான இடங்களுக்கும் செல்லவுள்ளார். பின்னர் தனது விஜயம் குறித்து அறிக்கையொன்றை இந்திய அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

விஜய் நம்பியார் இந்தியா சார்பில் முக்கியமான வெளிநாட்டு இராஜதந்திரப் பதவிகளை வகித்தவர். இலங்கையின் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து

(18 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர்க்கந்தன் நேற்றுமுன்னிரவு திருமஞ்சத்தில் வீதிவலம் வந்தபோது...



## யாழில் கைதுசெய்யப்பட்ட போராளியை பார்வையிட கண்காணிப்புக்குழு முயற்சி

கொழும்பு, ஓக.20

யாழ். பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் - அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் படுகொலையுடன் தொடர்புபட்டவர் என்ற குற்றச்சாட்டின்கீழ் படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியை நேரில் பார்வையிடுவதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

கடந்த புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழகம் அருகே கலட்டிச் சந்திப்பகுதியில் வீட்டில் வைத்து புலிகள் இயக்க உறுப்பினரான கோபி எனப்படும் கதிரமலை வைதீகன் கைது செய்யப்பட்டார். உடனடியாக ஹெலிமூலம் பலாலி இராணுவத் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கிருந்தும் உடனடியாகவே கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டார். இந் தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசியபோதும், புலிகளால் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது. அவரைவிடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

இதனை அடுத்து, கொழும்பில் வைத்து விசாரிக்கப்பட்டுவரும் கோபியைப் பார்வையிடுவதற்கு கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுத்துவருகின்றது என அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு நிதி கிடைப்பதை தடுப்பதற்கு அரசு தீவிர முயற்சி!

### சர்வதேச வலையமைப்பை உருவாக்கத் திட்டம்

கொழும்பு, ஓக. 20

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக சர்வதேச நாடுகளில் நிதி திரட்டப்படுவதையும் அந்தப் பணம் இலங்கைக்குக் கொண்டு வரப்படுவதையும் தடுக்க அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்கென சர்வதேச மட்டத்தில் வலையமைப்பு ஒன்றை உருவாக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

வெளிநாடுகளில் இருக்கும் இலங்கைத் தூதுவர்களின் மூலம் இதற்கான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் முன்பும், பின்பும் புலிகளால் மேற்கொள்ளப்பட்டவை என்று கூறப்படும் கொலைகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து உலக நாடுகளுக்கு அனுப்பிவைப்பதும் அரசின் திட்டத்தில் ஓர் அங்கமாகும்.

வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களே புலிகளுக்குப் பெருந்தொகையான நிதியை வழங்கிவருகின்றனர். இதனால், வெளிநாடுகளில் இருந்து இங்கு தொடர்ச்சியாகப் பணம் அனுப்புபவர்களின் பட்டியலும் இரகசியமாகத் தயாரிக்கப்படுகின்றதாம். டொலர்களாகவோ அல்லது காசோலைகளாகவோ அன்றி சட்டவிரோத உண்டியல்காரர்கள் மூலமாகவே பெருந்தொகையான பணம் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதாகவும்-

சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்படும் இத்தகைய கறுப்புப் [illegible]

(18 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை அவசரமாகக் கூட்ட ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,ஓக.20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை அவசரமாகக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியும் அக்கட்சியின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவைப் பணித்திருக்கிறார்.

கட்சியின் யாப்பைத் திருத்துவது தொடர்பாக கட்சியின் மத்திய குழுவினது அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவே நிர்வாகக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு கட்சித் தலைமைப் பதவியைத் தொடர்ந்தும் தானே வகிப்பதற்கு ஜனாதிபதி விரும்புகிறார். அதற்கேற்ப கட்சி யாப்பினைத் திருத்துவதற்கு அவர் உத்தேசித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்னும் ஓரிரு நாள்களில் கூடவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எதிர்வரும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமைதி முயற்சிகளை முன்னெடுக்க மக்கள் பலமுள்ள புதிய அரசு தேவை!

## புதுடில்லியில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிவடையும் நேரம் நெருங்கிவிட்டது. நாடாளுமன்றத்திலும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. சிறுபான்மை அரசாங்கம் தான் இப்போது ஆட்சியில் உள்ளது. இவ்வாறான அரசினால் சமாதான முயற்சிகளை சிறந்தமுறையில் முன்னெடுக்க முடியாது. இந்த நிலையில் அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் மக்கள் பலம் கொண்ட புதிய அரசாங்கத்தின் தேவை இலங்கையில் எழுந்துள்ளது.

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. புதுடில்லியில் தெற்காசிய ஒத்துழைப்பிற்கான இந்தியப் பேரவை ஏற்பாடு செய்திருந்த தினேஷ் சிங் ஞாபகார்த்த நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்படி கருத்தை வெளியிட்டார் அவர்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பேச்சுகள் மூலம் கிடைக்கும் அரசியல் தீர்வே இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். எனவே, அமைதி முயற்சிகளை வெகுவிரைவில் ஆரம்பிக்கவேண்டும். சமாதானமானது மக்களின் முன்னுரிமைத் தேவையென்பதும், போர்நிறுத்த ஒப்பந்தத்தை முன்னெடுப்பதினை மக்கள் விரும்புகிறார்கள் என்பதும் அண்மையில் நடத்திய ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட பின்னர், அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பில் ஜனாதிபதியும், அரசும் கருத்துகளை வெளிப்படுத்தியதைக் காண முடிந்தது. எனவே, அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

2002 ஆம் ஆண்டு நவம்பர் ஒஸ்லோ பிரகடனம், 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் ஒஸ்லோ பிரகடனம், 2003 ஆம் ஆண்டு ஜூன் டோக்கியோ பிரகடனம் என்பவற்றை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு வரையறுக்கப்படவேண்டும். எந்தவோர் இடைக்காலக் கட்டமைப்பும், இறுதித்தீர்வும் இந்த வரையறைக்குள் தான் இருக்கவேண்டும்.

2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ பிரகடனத்தில் உள்ளவாறு ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட தீர்வை எட்டுவதற்காக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலுள்ள அர்ப்பணிப்பு, எதிர்கால அமைதி முயற்சிகளில் கூடுதலாக கவனத்திற்கொள்ளப்படவேண்டிய அம்சமாக இருக்கும். சமஷ்டி முறையானது நாட்டை பிரிக்குமென்று தென்னிலங்கையில் அச்சமொன்று நிலவுகிறது. இந்த அச்சத்தை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டைப் பிரிப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமல்ல. நாட்டின் ஐக்கியத்தையும், மக்களின் சுயாதிபத்தியத்தையும் பாதுகாப்பதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். இலங்கைக்கேற்ற சமஷ்டி முறையை தேர்ந்தெடுக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். முன்னரும் இவ்வாறான முறைகள் இருந்தன. இந்தியா போன்று இலங்கையிலும் அரசியலில் பிராந்திய நிர்வாகங்களுக்கு முழுமையான சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. எமது மன்னர்மார் அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்யும்போது றுகுணு மற்றும் மாயாரட்ட பகுதி நிர்வாகம் சுயாட்சி அடிப்படையில் இருந்தன.

-இவ்வாறு ஐ.தே.க. தலைவர் அங்கு மேலும் தெரிவித்தார். (எ-க)

# தலையிடாக் கொள்கையில் இந்தியா தொடர்ந்து உறுதி!

## ரணிலிடம் பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20

"இலங்கையின் அரசியல் நிலைமையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. அமைதி முயற்சிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதையே அது விரும்புகிறது. எவ்வாறாயினும் இலங்கையின் அமைதி முயற்சிகளில் புதுடில்லி நேரடியாகத் தலையிடாது."

-இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங். எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் இருநாடுகளுக்கு இடையிலான பரஸ்பர நட்புறவுகள் குறித்து இந்தப் பேச்சுகளில் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக இலங்கையின் அமைதி முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன என இங்கு சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, சிறுபான்மைப் பலம் கொண்ட அரசாங்கமே ஆட்சியில் இருப்பதால் அமைதி முயற்சிகளை வலுவுடன் முன்னெடுக்க முடியாத சிக்கல் இலங்கையில் இருப்பதைசுட்டிக்காட்டினார்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும்முயற்சிகளுக்கு தமதுகட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென்றும் ரணில் இந்தியப் பிரதமரிடம் கூறியுள்ளார்.



இங்கு கருத்துத் தெரிவித்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கையின் தற்போதைய நிலைமையை இந்தியா கூர்மையாக அவதானித்து வருகிறது என்றும்-

இலங்கை விடயத்தில் புதுடில்லி நேரடித் தலையீடுகளை இப்போதைக்கு மேற்கொள்ளாதென்றும்- கூறியுள்ளார்.

அமைதி முயற்சிகளை மீண்டும் உடனடியாக முன்னெடுப்பதற்கு இரு தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே இந்தியாவின் அபிப்பிராயம் என்றும் மன்மோகன் சிங் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருடனான இந்தச் சந்திப்பில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொரகொட, புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க, எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசகர் ரி.கே.வல்சன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஷ்யாம் சரண் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# ஜனாதிபதி - ரணில் அடுத்த வாரமளவில் நேரில் சந்திப்பர்!

கொழும்பு, ஓக.20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று அடுத்தவார நடுப்பகுதியில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து உத்தியோகப்பற்றற்ற அழைப்பு ரணிலுக்குச் சென்றுள்ளபோதும், பேச்சுக்குச் செல்வது தொடர்பில் ஐ.தே.க. தலைவர் இன்னமும் உறுதியான தீர்மானத்தை எடுக்கவில்லை என்று கூறப்பட்டது.

அதேசமயம், ஜனாதிபதியை சந்திப்பதா, இல்லையா என்பது பற்றி கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஐ.தே.க. தலைவர் ஆராய்ந்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

# கண்டி பெரஹறாவை ஜனாதிபதி பார்வை!

கொழும்பு, ஓக.20

கண்டி தலதா மாளிகையின் வருடாந்த பெரஹராவின் இறுதிநாள் நிகழ்வான ரந்தோலி பெரஹராவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது புதல்வர் விமுக்தி குமாரதுங்கவும் நேற்றிரவு பார்வையிட்டனர்.

ஜனாதிபதியின் வருகையினையொட்டி நேற்றுக்காலை முதல் கண்டி நகர் முழுமையான பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. நேற்றுமாலை கண்டியில் முக்கியமான பல வீதிகள் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தன.

இன்றும் கண்டியில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அஸ்கிரிய, மல்வத்து மற்றும் சியாம் பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெறவுள்ளார். (எ-க)

# நல்லூரில் வழமைபோன்று இசை அர்ச்சனை நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் கார்த்திகைத் திருவிழாவன்று இசை அர்ச்சனை நிகழ்வு வழமை போல இடம்பெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் கலைஞர்களுக்கான ஒத்திகை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். இந்த ஒத்திகையில் சகல கலைஞர்களையும் பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-3)

# இராணுவத்தினரின் பாதுகாப்புடன் நகரில் வாகனங்களை சோதனையிட்ட பொலீஸார்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.நகரப் பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் பொலீஸார் வீதியில் வாகனங்களைத் துருவித்துருவிச் சோதனையிட்டனர்.

நேற்றுக்காலை பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரின் பாதுகாப்புடன் யாழ். நகரப்பகுதிக்கு வந்த பொலீஸார் வீதியால் சென்ற சகல வாகனங்களையும் வழிமறித்துத் துருவித்துருவிச் சோதனையிட்டனர்.அடையாள அட்டைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கை காரணமாக நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.படையினரின் இத்தகைய தீடீர் நடவடிக்கையால் நகரில் கூடியிருந்த மக்கள் மத்தியில் அச்ச நிலை உருவாகியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(எ-7)

# டிப்ளோமா ஆசிரியர் நல்லூரில் நாளை சந்திப்பு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் அண்மையில் நியமனம் கிடைக்கப்பெற்று ஆசிரிய கலாசாலைகளுக்குச் சென்றுள்ள, ஆசிரிய கலாசாலைகளுக்குச் செல்லாத, உடற்கல்வி ஆசிரியர்கள் (உடற்கல்வி டிப்ளோமாதாரிகள்), கடல்வள ஆசிரியர்கள் (கடல்வள டிப்ளோமாதாரிகள்), ஆங்கில ஆசிரியர்கள் (ஆங்கில டிப்ளோமாதாரிகள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்) அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூரில் உள்ள சயன்ஸ் அக்கடமியில் ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய சேவைத்தரம் 3:1 இற்கு உள்வாங்குவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதால் சகலரையும் தங்களின் கல்விச்சான்றிதழ், டிப்ளோமாச் சான்றிதழ், முதல் நியமனக்கடிதம் ஆகியவற்றின் பிரதிகளோடு சமுகமளிக்குமாறும் - இச்சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (9)

# சமாதான உதைபந்தாட்டம் சென்.பீற்றர்ஸ் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களாக நடந்த சமாதான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடந்த இச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று மாலை நடைபெற்றது.

இறுதியாட்டத்திற்கு முன் நடைபெற்ற மூன்றாவது இடத்திற்கான போட்டியில் இளவாலை ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி மோதியது.

இளவாலை ஹென்றிஸ் கல்லூரி அணியை 2: 0 என்ற கோல்க்கணக்கில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி வெற்றிகொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிகொண்டு சமாதானக் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சுவிஸ் முகவர் அபிவிருத்திக் கூட்டுறவு வெளிக்கள அலுவலகத்தின் தலைவர் நடோல்ப் பிரங்ஹோலர் கலந்துகொண்டு பரிசிலை வழங்கினார்.

- சிறந்த கோல்க் காப்பாளருக்கான விருதினை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் தலைவர் பெலிக்ஸ் பெற்றுக்கொண்டார்.

ஆட்டத்தொடரின் சிறந்த வீரருக்கான விருதினை கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி வீரன் அமல சஞ்ஜய பெற்றார்.

சிறந்த ஆட்டநாயகனுக்கான விருதிற்கு கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி வீரர் பிரியங்கரா தெரிவுசெய்யப்பட்டார்.(3-190)



சமாதான உதைபந்தாட்டத்தின் இறுதி ஆட்டத்தில் அணி வீரர்களை அறிமுகம்செய்வதற்காக விருந்தினர்களை சென்.பற்றிக்ஸ் மற்றும் கொழும்பு சென்.பற்றிக்ஸ் கல்லூரிகளின் அதிபர்கள் மைதானத்துக்கு அழைத்துச் செல்வதனையும், இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியின் அணித் தலைவர், இரண்டாவது இடத்தினைப் பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அணித் தலைவர் ஆகியோர் பிரதம விருந்தினரான நடோல்ப்பிரங்ஹோலரிடமிருந்து வெற்றிக்கிண்ணங்களைப் பெறுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்- தமிழினியன்)*

# காஸாவில் 11 குடியிருப்புகளில் இருந்து யூதர்கள் இராணுவத்தால் விரட்டியடிப்பு

## ஏனையோரை வெளியேற்ற நடவடிக்கை

ஜெருசலேம்,ஓக.20

தனது ஆக்கிரமிப்பிலுள்ள காஸாப் பகுதியின் 11 குடியிருப்புகளில் வசித்துவந்த யூதர்கள் அனைவரையும் இஸ்ரேல் இராணுவம் வெளியேற்றிவிட்டது.

காஸாப் பகுதியில் மொத்தம் 21 யூதக் குடியிருப்புகள் உள்ளன. இவை அனைத்திலும் உள்ள யூதக் குடியிருப்புகளை முழுமையாகக் காலி செய்ய இஸ்ரேல் இராணுவம் தீவிர நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆனால், இங்குள்ள யூதர்கள் இஸ்ரேல் இராணுவத்துக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

பலஸ்தீனத்துக்குச் சொந்தமான காஸாப் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்துக்கொண்டது. பின்னர் இஸ்ரேலியர்களை அங்கு குடியமர்த்தியது. 38 ஆண்டுகளாக இஸ்ரேலியக் குடியிருப்புகள் அங்கு இருந்து வருகின்றன.

காஸாப் பகுதியில் 13 லட்சம் பலஸ்தீனர்கள் வசித்து வருகின்றனர். காஸாப் பகுதி ஆக்கிரமிப்பைக் கைவிடவேண்டும் என பலஸ்தீனம் தொடர்ந்து கோரிவந்தது. இப்பிரச்சினையால் பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே இடைவிடாத மோதல்களும் நடந்துவந்தன. இதற்கு முடிவுகட்டுவதற்காக காஸாப் பகுதியிலிருந்து யூதர்கள் அனைவரும் 48 மணி நேரத்தில் வெளியேறவேண்டுமென கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது இஸ்ரேல் அரசு.

இதையடுத்து செவ்வாய்க்கிழமை முதல் வெளியேற்றம்

உலக அரங்கில்

தொடங்கியது. எனினும் பெரும்பாலான இஸ்ரேலியர்கள் காஸாப் பகுதியிலிருந்து வெளியேற மறுத்துவந்தனர்.

இதையடுத்து வெளியேற மறுத்த யூதர்களை இஸ்ரேல் இராணுவம் வலுக்கட்டாயமாக வெளியேற்றும் பணியை வியாழக்கிழமை தொடங்கியது.

எதிர்பார்த்ததைவிட வெளியேற்றம் விரைவாக நடைபெற்றுள்ளது. 8500 குடும்பங்களில் 60 சதவீதக் குடும்பங்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டன. 11 குடியிருப்புகள் முழுமையாகக் காலிசெய்யப்பட்டுவிட்டன. எதிர்வரும் வியாழக்கிழமை இரவுக்குள் காலிசெய்யும்பணி நிறைவடைந்துவிடும் என இஸ்ரேல் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (8)



காஸாப் பகுதியில் அனைத்து யூதக் குடியிருப்புக்களையும் இஸ்ரேல் இராணுவம் வலுக்கட்டாயமாகக் காலிசெய்து வருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கரெம் அட்ஸ்மோனா என்ற இடத்தில் புதன்கிழமை அழுகை பீறிடும் நிலையில் கிளர்ச்சிசெய்த யூத சிறுவர், சிறுமிகளையும் காஸாப் பகுதியிலிருந்து யூதர்கள் வெளியேறுவதை கடற்பகுதியில் அலங்கரிக்கப்பட்ட படகில் இருந்து கொண்டாடும் பலஸ்தீன பயங்கரவாத இயக்கத்தினரையும் படங்களில் காணலாம்.

# பறவை மோதியதால் விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது

புதுடில்லி,ஓக.20

டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து பெங்களூர் புறப்பட்ட விமானத்தின் மீது பறவை மோதியதால் அது அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

'ஜெட்ஏர்வேஸ்'க்கு சொந்தமான விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் முற்பகல் 10.15 மணிக்கு டில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து பெங்களூர் புறப்பட்டது. இவ்விமானத்தில் ஒன்பது பணியாளர்கள் உட்பட 101 பேர் இருந்தனர். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் அதன்மீது பறவை மோதியதால், தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதை விமான ஓட்டி உணர்ந்தார். இதனால் விமானத்தை உடனடியாகத் தரையிறக்க அனுமதி கோரினார். விமான நிலையத்தின் அனுமதி கிடைத்தவுடன் முற்பகல் 10.30 மணிக்கு ஜெட் ஏர்வேஸ் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. முன்னதாக ஓட்டி தரையிறங்க அனுமதி கோரியவுடன் விமான நிலையத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தீயணைப்பு வாகனங்கள், அம்புலன்ஸ்கள் தயார்நிலையில் நிறுத்தப்பட்டன. பின்னர் பயணிகள் அனைவரும் மாற்று விமானம் மூலம் பெங்களூர் அனுப்பி வைக்கப்பட்டனர். (8)

# தலிபான் முக்கிய தலைவர் பாகிஸ்தானில் சிக்கினார்

இஸ்லாமாபாத்,ஓக.20

தலிபான் தலைவர் முல்லா ஓமருக்கு நெருக்கமானவரும் மூத்த தலிபான் தலைவருமான முகமது யாசிர் பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் விசாரணை நடந்து வருகின்றது. இந்தத் தகவலைப் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அஃப்தாப் கான் ஷெர்பாவ் கூறினார். தனியார் தொலைக்காட்சிக்கு அவர் பேட்டியளித்தார். தலிபான் கலாசார செய்திப் பிரிவின் தலைவராக யாசிர் பல மாதங்களுக்கு முன் நியமிக் கப்பட்டார்.

யாசிர் இனி அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படுவாரா என்று கேட்ட போது, இப்போது அதுகுறித்து எதையும் கூற இயலாது - என்றார்.

இதற்கிடையில் -

அமெரிக்க அரசு வெளியேற்றிய 2 பாகிஸ்தான் டாக்டர்கள் கடந்த புதன்கிழமை பாகிஸ்தான் வந்து சேர்ந்தனர்.

அந்த இரு டாக்டர்களுக்கும் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பிருப்பதாகச் சந்தேகம் இருந்தது. பின்னர் விசாரணையில் அது தவறான புகார் என்று தெரியவந்தது.

அவர்கள் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் மதக் கல்வி நிலையம் நடத்திவந்தனர். அவர்களது விசா கடந்த ஆண்டே காலாவதியாகிவிட்டது. விசா நீடிப்புக்கு அவர்கள் விண்ணப்பித்தனர். அது ஏற்கப்படவில்லை. இதையடுத்து அவர்கள் நாடு திரும்பினர் என்று அமைச்சர் கூறினார்.

# உடல் நலத்திற்குத் தீங்கை ஏற்படுத்தும் இந்திய மூலிகைகளைப் பயன்படுத்தாதீர்!

## இங்கிலாந்து மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் எச்சரிக்கை

இந்திய மூலிகை மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று இங்கிலாந்து மருந்துக் கட்டுப்பாடு மற்றும் சுகாதாரத் துறை ஒழுங்கு முறை நிறுவனம் எச் சரித்துள்ளது.

ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்தின் மகத்துவதத்தை உலக நாடுகள் இப்போது உணரத் தொடங்கிவிட்டன.

மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் இந்தியாவில் இருந்து இங்கிலாந்து உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் தயாராகும் சில ஆயுர்வேத மூலிகை மருந்துகள் உடல்நலத்திற்குத் தீங்கு ஏற்படுத்தலாம். அவற்றில் மேர்க்குரி, ஆர்சனிக், காரீயம் போன்ற உலோகங்கள் அதிகமாகக் கலந்திருக்கின்றன என்றும் அந்த மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

டாபர் இந்திய நிறுவனம், கேரளாவில் உள்ள ஸ்ரீஜி ஹெர்பஸ் நிறுவனம், ஜண்டு பார்மசூட்டிக்கல் போன்ற பல்வேறு நிறுவனங்களையும் இங்கிலாந்து மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் பட்டியல் இட்டுள்ளது.

இந்த மருந்துகள் இங்கிலாந்துக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் அந்த நிறுவனம் கணக்கெடுத்து வருகிறது.

இந்த மருந்துகளில் உள்ள உலோகங்கள் வாந்தி, வயிற்று வலி, சிறுநீரகப் பாதிப்பு, மயக்கம் போன்ற கோளாறுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த நிறுவனம் எச்சரித்து இருக்கிறது. (8)

# பாஸ் பெறாமல் வார்டுகளில் நோயாளிகளுடன் தங்கி நிற்போர் வெளியேற்றப்படுகின்றனர்

## புதிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவுறுத்து

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான நேரங்களை ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

அந்த விவரம் வருமாறு:-

- நண்பகல் 12.00 - 1.00 மணி
- பிற்பகல் 4.30 - 6.00 மணி
- காலையில் அவசர தேவைகளுக்கு 5 மணி முதல் 6.00 மணிவரை

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் விடுதி வைத்திய அதிகாரிகளின் அனுமதி இன்றி தங்கி நிற்பது தவிர்க்கப்படவேண்டும். உதவியாளர்கள் தேவைப்படும் நோயாளர்களுக்கு விடுதிகளில் (வார்டுகளில்) 'பாஸ்' வழங்கப்படும். அனுமதிக்கப்படுபவர்கள் மட்டுமே பார்வையிடும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வார்டுகளில் தங்கிநிற்கமுடியும். இந்த நடைமுறையைக் கடைப்பிடித்து வைத்திய சேவையைத் திறம்பட நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களைக் கோருகின்றோம் - என்று ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது.

இதேவேளை -

உரிய அனுமதி பெறாமல் (பாஸ்) வார்டுகளில் நோயாளர்களுடன் தங்கிநிற்கும் உதவியாளர்கள் கடந்த சில தினங்களாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு வார்டுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட பலர் இரவு வேளைகளில் ஆஸ்பத்திரிக்கு வெளியே வீதி ஓரத்தில் பொழுதைக் கழிக்கின்றனர். பெண்கள் உட்பட சுமார் முப்பது பேர் நேற்றுமுன்தினம் இரவு ஆஸ்பத்திரிக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் அந்தரித்து நின்றதைக் காணமுடிந்தது. (ஐ-12)

### பட்டப்பகலில் தங்கச் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.20

தலைக்கவசம் அணிந்து 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று வீதியில் சைக்கிளில் வந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை இழுத்தறுத்துக்கொண்டு தப்பிச்சென்றது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ். இலுப்பையடிச் சந்திக்குச் சமீபமாக நாவலர் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே தனதுசங்கிலியை இழந்துள்ளார்.

அப்பெண்மணி கூக்குரல் இட்டபோதும் அக்கும்பல் வேகமாகத் தப்பிச்சென்றுவிட்டது. (ஒ-12)

# யாழ்.நகரில் திருட்டுப்போன இரண்டு மோ.சைக்கிள்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.நகரப் பகுதியில் திருட்டுப் போன இரண்டு மோட்டார் சைக்கிள்கள் யாழ்.பிரதேச அரசியல் துறையினரின் நடவடிக்கையால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 13 ஆம் திகதி யாழ்.சென்.ஆன்ஸ் பாடசாலைக்கருகில் 'ஹான்டில்' பூட்டு இடப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த எம்.ரி. 90 ரக மோட்டார் சைக்கிளும் -

கடந்த 14 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் (மேற் - 90) திருட்டுப்போயிருந்தன.

இது தொடர்பாக மோட்டார் சைக்கிளின் உரிமையாளர்கள் யாழ்.பிரதேச அரசியல் துறையினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து அரசியல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது மேற்படி இரு மோட்டார் சைக்கிள்களையும் நாவற்குழிப் பகுதியிலிருந்து மீட்டுள்ளதுடன், திருட்டுடன் சம்பந்தப்பட்ட நபரையும் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டையும் உரிமையாளர்களிடம் ஒப்படைத்த அரசியல் துறையினர் சந்தேக நபரைத் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-13-180)






# மிருசுவில் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இன்றி மக்கள்

தென்மராட்சி,ஓக.20

மிருசுவில் மருத்துவமனைப் பிரசவ விடுதியில் 'அம்புலன்ஸ்' வசதி இல்லாததால் கர்ப்பிணிகள் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

சமீபத்தில் பிரசவ வலி ஏற்பட்ட கர்ப்பிணி ஒருவரை மிருசுவில் மருத்துவமனையிலிருந்து ஏற்றிவர வாகனவசதி இல்லாததால் உயிராபத்து ஏற்படும் நிலை உருவானதாகவும் பின்னர் மருதங்கேணி வைத்தியசாலையிலிருந்து வந்த அம்புலன்ஸ் வாகனத்தில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதால் அவர் காப்பாற்றப் பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் மூன்று மணிநேரம் பிரசவ வேதனையில் துடித்த இப்பெண்ணை மருதங்கேணியிலிருந்து அம்புலன்ஸ் வந்த பிறகே அனுப்ப முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# சந்தையில் மலசலகூடம் சேதம்: அதனால் சுகாதாரம் சீர்கேடு

அச்சுவேலி,ஓக.20

அச்சுவேலிப் பொதுச் சந்தையின் மத்தியில் அமைந்துள்ள பொதுமலசல கூடம் உடைந்த நிலையில் பொதுச் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலிச் சந்தையில் மீன் விற்பனைப் பகுதிக்கும் மரக்கறி விற்பனைப் பகுதிக்கும் இடையில் பொதுமலசலகூடம் அமைந்துள்ளது.

மலசலகூடத்தின் குழி மற்றும் குழாய் உட்பட முக்கியமான பகுதிகள் சேதமடைந்துள்ளன. இதனால் துர்நாற்றம் வீசுகின்றது. அத்துடன் பொதுமக்களின் பாவனைக்கு ஏற்புடையதாக இல்லாமல் இருப்பதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிட முறையிட்ட போதும் பயனேதும் ஏற்படவில்லையென்று கூறப்படுகின்றது. (ஒ-11)

### சமூர்த்தி வங்கிக்கு நிர்வாகம் தெரிவு

குருநகர்,ஓக.20

யாழ்.நகர் கிழக்கு சமூர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச்சபையின் புதிய தலைவராக அ.யேசுதாசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-51)

## விற்பனைக்கு

R V 999 D வகை
3 DVD/ VCD/ CD CHANGER,
3 WAY SPEAKER, ACTIVE SUB
NOOFER HYBRID DUAL WOOFER
புத்தம் புதிய SONY Player விற்பனைக் குண்டு. கொழும்பில் ரூ. 75,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
P.டெனி, கபிரியேல் வைத்தியசாலை (பஸ் நிலையம் அருகில்) டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
T.P- 021 222 5684, 0776915056, 0773164752


## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,ஓக.20

அல்லைப்பிட்டி கொக்குளபரி மூன்றுமுடி கருமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு உற்சவ கிரியைகள் நடைபெற்று, பகல் 12 மணிக்குத் திருவீதியுலாவுடன் நிறைவுபெறும். செப்ரம்பர் இரண்டாம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும். (9-117)

* * *

வலி.கிழக்கு,ஓக.20

மட்டுவில் தெற்கு கல்வம் வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதிவரை திருவிழா நடைபெறும். (த-180)

* * *

குருநகர்,ஓக.20

குருநகர் கடற்கரைவீதியில் அமைந்துள்ள புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்தத் திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளன. இம்மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நற்கருணை நாதர் வழிபாடும் மறுநாள் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருநாள் திருப்பலியும் நடைபெறும். (9-51)


## தவறிவிட்ட ஆவணங்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து தனியார் வாகனத்தில் கொழும்பு செல்கையில் முகமாலைக்கும் ஓமந்தைக்கும் இடையில் எனது பிரயாணப்பை (கறுப்புநிறம்) ஒன்று தவறிவிட்டது. இப் பையில் பெறுமதியான உடுப்புக்கள் உட்பட எனது பட்டப்படிப்பிற்கான சான்றிதழ்களும் உள்ளன. இவை எனது எதிர்காலத்திற்குத் தேவை என்பதால், இப் பிரயாணப் பையைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின் றேன்.

உரிய சன்மானம் வழங்கப்படும்

முகவரி: செல்வி நா.ஜெயராணி (ஆசிரியை)
தேவாலய வீதி,
சங்கானை.
தொ.பே.இல.: 077-6188412
(39098)(39-14-11)



## இசை அர்ப்பண அழைப்பு



அன்புடையீர்!

வணக்கம்,

இணுவில் கந்தசுவாமி கோவில் திருமுறை ஓதுவாரும், இசை நாடக விற்பன்னருமாகிய அமரர் பெரியதம்பி கந்தையா அவர்களின் நினைவு அர்ப்பணமாக, அவரது பேரப்பிள்ளை வழங்கும் இசை நிகழ்ச்சியில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:
இணுவில் அறிவாலயம்
காலம்:
20.08.2005 சனிக்கிழமை மாலை 7 மணி
தலைவர்: திரு.சி.பாலச்சந்திரன் அவர்கள்
(தலைவர், இணுவில் அறிவாலயம்)
ஆசியுரை: செஞ்சொற்செல்வர்
திரு.ஆறுதிருமுருகன் அவங்கள்
பாட்டு: செல்வி சுகனியா அருள்சோதி அவர்கள்
(கனடா, R.H.KING, அக்கடமி)
வயலின்: திரு.அ.ஜெயராமன் அவர்கள் .
மிருதங்கம்: திரு.க.கஜன் அவர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தையா அருள்சோதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

நிர்வாக சபை,
அறிவாலயம்,
இணுவில்.
(சி-44585)(39-14-11)


### மற்றவரைக் காட்டி விட்டு தப்ப முயன்ற திருடன் வசமாகச் சிக்கினான்

குருநகர்,ஓக.20

பண்ணாகத்தில் சமயோசிதமாகத் தப்ப முயன்ற திருடன் பொது மக்களிடம் வகையாகச் சிக்கினான்.

வயோதிபப் பெண்ணொருவரிடமிருந்து தங்கச் சங்கிலியை அறுத்த திருடன், 'அதோ திருடன் திருடன்' என முன்னால் சென்ற அவ்வூர் வாசியைப் பார்த்துக் குரலெழுப்பிக் கொண்டே சைக்கிளில் தப்பமுயற்சித்தார். ஆனால், முன்னால் சென்றுகொண்டிருந்த அவ்வூர் வாசியும் மக்களும் குறிப்பிட்ட நபரைப் பிடித்துச் சங்கிலியை மீட்டனர். வட்டுக்கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் அவர்கள் திருடனை ஒப்படைத்தனர். (ஒ-51)

### வாசகர் கருத்தரங்கு

தென்மராட்சி,ஓக.20

சாவகச்சேரி நகரசபை பொது நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு பொது நூலகமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'உள்ளூராட்சி சபைகளும் அதன் செயற்பாடுகளும்' என்னும் தலைப்பில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற அலுவலர் சு.தர்மலிங்கம் உரையாற்றுவார். (ஐ-9-117)

### மாட்டுவண்டி சவாரிப் போட்டி

தெல்லிப்பழை கிறாஸ்கொப் பேர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-204)


## Jayoda ஜயோதா cfhdaod

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7157285 முதல் 7169509 வரை சீட்டிழுப்பு இல. 160 திகதி 18-8-2005

வெற்றி எண்கள் 0 5 7 8 1 8 சுப்பர் எண் 26

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,23,93,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,23,93,600/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 5,000/- | 5,25,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,048 | 500/- | 5,24,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,533 | 50/- | 5,26,650/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,04,358 | 10/- | 10,43,580/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,051 | 100/- | 1,05,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,431 | 20/- | 2,08,620/- |
| | | மொத்தம் | 46,88,950/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 52,91,550/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 12,686,375/-
தொடர் இல. 6227469 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 22 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 7165469-4-87 |
| கம்பஹா | 7162287-0-64 |
| பொலன்னறுவை | 7158667-1-79 |
| கண்டி | 7163659-3-64 |
| குருநாகல் | 7161518-5-33 |
| கம்பஹா | 7157497-1-65 |
| களுத்துறை | 7167951-6-97 |
| காலி | 7168359-8-51 |


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு 13 - 04 - 1928



உதிர்வு 21 - 07 - 2005

### அமரர் கார்த்திகேசு செல்லத்தம்பி

(முன்னாள் உப்பு கூட்டுத்தாபன ஊழியர்)

ஈசனோடு இணைந்திட்ட எங்கள் அன்புத் தெய்வமே!
என்றும் எம் நெஞ்சோடு
அழியாத நினைவாக நிலைத்திருக்கும் - ஐயாவே!
தங்கள் பசுமையான நினைவுகளை
மறந்திடத்தான் முடியுமா?
நித்தம் அணையாத தீபமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்
எங்களைக் காத்தீர்கள் - பாச உறவே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை என்றும் வேண்டுகிறோம்.

கடந்த (21.07.2005) இல் இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறந்த சேதிகேட்டு பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகளும் புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (20.08.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து, அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி: சங்கத்தார் வயல், இயக்கச்சி.
தற்காலிக முகவரி: உசன், மிருசுவில்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(39098)(92(39-14-11)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
### முருகேசு மீனாட்சி
(சரசு)
திதி: 20.08.2005

மண்ணில் 10.08.1928

விண்ணில் 21.07.2005

எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்த அனைவருக்கும் 25.07.2005 இல் நடைபெற்ற நல்லடக்கத்தில் கலந்துகொண்டு, உதவி புரிந்தவர்களுக்கும் உள்ளூரிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நேரிலும் தொலைபேசியிலும் துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரது அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (20.08.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

3/2, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.
-குடும்பத்தினர்.
(390901) (39-14-11)

## மரண அறிவித்தல்

### நாகராசா கனகம்மா
(சோதி) நயினாதீவு



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாக ராசா கனகம்மா (சோதி) 19.08.2005 வெள்ளிக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை- தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசா (பிரபலவர்த்தகர்- கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான கந்தசாமி, சரஸ்வதி, மதியாபரணம், தருமலிங்கம், இராசரெத்தினம் மற்றும் நீலாம்பிகை, கிருஸ்ண பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாம் பிகை, சுப்பிரமணியம், கனகம்மா, சண்முகசுந்தரம், மனோன் மணி, இராசலெட்சுமி, சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனியு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.3 மணியளவில் நயினாதீவு சல்லிப்பரவை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

'பழமுதிர்ச்சோலை'
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(39087) (39
தகவல்:
வே.கிருஷ்ணபிள்ளை
(சகோதரன்).

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஆக்கபூர்வமான முயற்சி

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சந்தித்துப் பேசும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இரண்டு தரப்புகளுக்கும் இடையில் உண்டாகிவரும் முரண்படு நிலையையும், அதன்விளைவான முறுகல் சூழ்நிலையையும் தவிர்க்கவேண்டும் என்று இரண்டு தரப்புகளும் விரும்பியுள்ளன.

அதற்கான இணக்க நிலை தோன்றியமை வரவேற்கப்படவேண்டியது. இதுகுறித்து மக்கள் பெரும் திருப்தி அடைவர்.

பாதிப்பு எதுவும் இன்றிப் போர்நிறுத்தம் நீடிக்க வேண்டுமாயின், அதற்கான ஒப்பந்தத்தின் பங்காளிகளான இரண்டு தரப்புகளுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் நட்புறவும் தேவை.

கடந்த சில காலமாக அத்தகைய சுமுக நிலை இருக்கவில்லை. குறிப்பாகக் கிழக்கில் அரசாங்கம் - இராணுவம் - அரச புலனாய்வுப் பிரிவு - அவற்றின் ஆசீர்வாதத்துடன் செயற்படும் குழுக்கள் - நடத்திய கொலைகளுடன் சுமுகநிலை மெதுமெதுவாகத் தேய்ந்துபோகத் தொடங்கியது.

ஆனால், அரசாங்கத் தரப்பு அந்தக் கொலைகளுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று மறுத்தது. அவ்வாறே காண்பித்தும் வந்தது. விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்களையும் ஏனைய ஆதரவாளர்களையும் தீர்த்துக் கட்டுவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்தது. போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கத்தக்கதாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக நிழல் யுத்தம் ஒன்றை நடத்தி வந்தது.

அதன் விளைவுதான் முறுகல், முரண்பாட்டுச் சூழ்நிலை. அந்தப் பாதக நிலைமை நாளும் பொழுதும் வளர்ந்து, போர்நிறுத்தம் முறிந்து போகுமோ என்று மக்கள் அஞ்சும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து வந்தது. அரசாங்கத் தரப்பு, தனது போர்நிறத்த மீறல்களை மறைத்தும் குறைத்தும் காட்டிய அதேவேளை, விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த மீறல்கள் என்று அதிக எண்ணிக்கையாக்கிப் பெருக்கிக் காட்டியது.

அதுமட்டுமா? தமக்கு உள்ள பிரசார வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டும் விரலைச் சுட்டுவதே அதன் தொழிலாக இருந்தது. அரசியல் லாபம் கருதிய காட்டமான கருத்துக்களை விதைத்தும் பரப்பியும் வந்தது அரச தரப்பு. இவையும் முரண்பாடுகளையும் முறுகல் நிலையையும் பெரிதாக்கி வளர்த்தன.

போர்நிறுத்தம் பேணப்படவேண்டும் என்பதனைப் பெயரளவில் பேச்சில் கூறி வந்தாலும், செயற்பாடுகள் முற்றுமுழுதாக அதற்கு மாறானவையாகவே அமைந்தன. அரசியல் தலைவர்கள் ஒப்புக்கு ஒன்றைச் சொல்ல, அதற்கு முற்றிலும் முரணான செயற்பாடுகளில் படைத்தரப்புச் செயற்பட்டது.

ஆனால், தமிழர் தரப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தனர்; இருக்கின்றனர். பிரச்சினைகளுக்கு போர் மாற்றீடு அல்ல என்பதில் மிகவும் உறுதியாக உள்ளனர். போர்நிறுத்தத்துக்கு வழிசெய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணுவதிலும் அக்கறை கொண்டுள்ளனர்.

எப்படியோ -

நிலைமை மேலும் மோசமடைந்து போர் மீளாதிருக்க வழி செய்யும் பொறுப்பு இரண்டு தரப்புகளிடமும் உண்டு. அதனை அரசு தரப்பு இப்போதாவது உணர்ந்து இரண்டு சாராருக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கு வகைசெய்யுமாறு அனுசரணையாளரான நோர்வே அரசிடம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாகும். எப்போதோ செய்திருக்கவேண்டியதை இப்போதாவது பிந்திய நிலையிலாவது சிந்தித்துக் கருமமாற்றியதால் ஒரு மாற்றம் உண்டாகி உள்ளது.

தாம் போர் விரும்பிகள் அல்லர் என்பதனை நிரூபிக்கும் வகையிலும் அரச தரப்பைச் சந்தித்துப் பேசுவதற்கு தயக்கம் எதுவும் இல்லை என்பதனை வெளிப்படுத்தும் விதத்திலும் விடுதலைப் புலிகள் அரச தரப்பினரைச் சந்தித்துப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்புகளினதும் இந்த இணக்கப்பாடு மேலும் நீண்டு நிலைத்து பெருத்து போர் அபாய நெருக்கடிகள் முற்றாக நீங்கி, சமாதானச் சூழல் தொய்வின்றி நிலைப்பதற்கான ஆரம்பப் படியாக அமையவேண்டும். இந்தமுயற்சி வெல்லவேண்டும் என்பதே சமாதான விரும்பிகளின் பேரவா.

ஆக்கபூர்வமாக எதுவுமே செய்யாது இருப்பதை விட, பிந்தியாவது செயற்படுவது நன்மையையே தரும் என்று நம்புவோமாக.

# பொலீஸ் சோதனைகள் ஸ்தம்பிதம்; விமானப் பயணிகள் அசௌகரியம்!

யாழ்ப்பாணம்,ஓக.20

பலாலியில் இருந்து கொழும்புக்கு நடத்தப்பட்டுவரும் தனியார் விமான சேவைகளில் பயணம் செய்யும் பயணிகளைச் சோதனையிடுதல் மற்றும் அவர்களுக்கு வழித்துணை வழங்குதல் ஆகிய பணிகளில் இருந்து பொலீஸார் திடீரென ஒதுங்கிக்கொண்டதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். விமான சேவைகளையும் ஒழுங்காக நடத்தமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி செல்லும் விமானப் பயணிகள் சிங்கள மகாவித்தியாலயப் பகுதில் வைத்துச் சோதனையிடப்படுவதும், பின்னர் அவர்கள் பயணம் செய்யும் வாகனத்துக்குப் பொலீஸ் உத்தியோகத்தர்கள் வழித்துணை வழங்குவதும் வழமை ஆகும்.

பயணிகள் செல்லும் வாகனம் பொலீஸ் சோதனைக்குட்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே கட்டுவனில் உள்ள முன்னணிக் காவல் நிலையத்தைத் தாண்டி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் செல்ல அந்த வாகனம் அனுமதிக்கப்படும்.

கடந்த சில தினங்களாகத் தமது இந்த வழமையான கடமைகளை யாழ். பொலீஸ் நிலையப் பொலீஸார் நிறுத்திவிட்டதால் விமானப் பயணிகளுக்கும் விமானசேவை நிறுவனங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. பொலீஸாரின் ஒத்துழைப்புக் கிடைக்காததால் விமான சேவைகளைச் சீராக மேற்கொள்ள முடியாதிருப்பதாக விமான சேவை நிறுவன அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஐ)

# விஜேவர்த்தன கொலை தொடர்பாக தமிழ்ப் பொலீஸாரிடமும் விசாரணை

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் கொலை தொடர்பாக தமிழ்ப்பொலீஸாரிடமும் விசாரணை இடம்பெறுவதாகப் பொலீஸ் நிலைய வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

கடந்த 4ஆம் திகதி இணுவில் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானார். இச்சம்பவத்தையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் அவரது சடலம் மீட்கப்பட்டது.

பொலீஸ் அதிகாரியின் கொலை தொடர்பாக விசாரணை நடத்தவென கொழும்பிலிருந்து புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 12 பேர் அடங்கிய குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக்குழுவினர் பரவலாக விசாரணைகளை மேற்கொள்டுள்ளனர்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் பணியாற்றும் தமிழ்பேசும் பொலீஸாரும் இக்குழுவினால் விசாரணை செய்யப்படுவதாகப் பொலீஸ் நிலைய வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது. (ஓ-13)

# ஓட்டோவில் வந்த குழுவினர் வான் சாரதியைத் தாக்கினர்

யாழ்ப்பாணம்,ஓக.20

ஓட்டோவில் வந்த சிலர் 'ஹைஏஸ்' வானில் வந்தவரை வழிமறித்துத் தாக்கியதில் வான் சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் சித்தன்கேணிப் பகுதியில் இச்சம்வம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் சென்றுகொண்டிருந்த 'ஹைஏஸ் வானிற்குக் குறுக்கே திடீரென ஓட்டோ ஒன்று நிறுத்தப்பட்டது என்றும் -

ஓட்டோவிலிருந்து இறங்கியவர்கள் 'ஹைஏஸ் வானின் சாரதியை மோசமாகத் தாக்கினர் என்றும் - கூறப்படுகிறது.

அவருடன் கூடச்சென்ற உறவினரையும் தாக்கமுயன்ற இவர்கள் பின்னர் ஓடிச்சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் வட்டுக் கோட்டையைச் சேர்ந்த குலசிங்கராஜா ரமணன்(வயது 24) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

கண்ணில் படுகாயமடைந்த நிலையில் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலீஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-12-78)

# குருதிக் கொடையாளர் கழகம் விரைவில் அங்குரார்ப்பணம்

## இதுகுறித்த கலந்துரையாடல் நாளை

யாழ். மாவட்டத்தில் குருதிக்கொடை வழங்குபவர்களை ஒன்றிணைத்து குருதிக்கொடையாளர் கழகம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதிக்கொடை வழங்குபவர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு யாழ். இரத்தவங்கி வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

குருதிக்கொடையின் உன்னதத்தை அனைவரும் அறிந்துகொள்ள வகை செய்யவும் குருதிக்கொடை வழங்கும் செயற்றிறனை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இந்தக் கழகம் அமைக்கப்பட வுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(ஓ-202)

ந/ 5779 திரு. செல்லையா குமாரசாமி
ந/ 5783 திரு. வேலுப்பிள்ளை பரராசசிங்கம்
ந/ 5797 திரு. கனகசிங்கம் பாலசுப்பிரமணியம்
ந/ 5802 திரு. நடராஜகுருக்கள் தியாகராஜஐயர்
ந/ 5806 திரு. நாகன் சின்னனு
ந/ 5811 திரு. ஜோண்செல்வதுரை செல்வரத்தினம்
ந/ 5813 திருமதி. பவளம் நடராசா
ந/ 5831 திரு. வீரவாகு மதியாபரணம்
ந/ 5844 திருமதி. கிருஷ்ணம்மா தாமோதரம்பிள்ளை
ந/ 5851 திரு. பொன்னையா கனகசபை
ந/ 5861 திருமதி. புனிதவதியம்மாள் கனகசபை
ந/ 5874 திருமதி. தனபாக்கியலட்சுமி பரராஜசிங்கம்
ந/ 5888 திரு. கந்தையா துரைராஜா
ந/ 5894 திரு. செல்லத்துரை குணரெட்ணம்
ந/ 5897 திருமதி. சிவயோகம் சிவசிங்கம்
ந/ 5899 திருமதி. தேம்பாமலர் குணநாயகம்
ந/ 5915 திரு. எட்வேட் நல்லையா
ந/ 5916 திரு. காசிப்பிள்ளை குமாரசாமி
ந/ 5920 திருமதி. பரமேஸ்வரி குஞ்சிதபாதம்
ந/ 5931 திருமதி. குணபூசணம் சபாநாதன்
ந/ 5943 திரு. நடேசு அழகராசா
ந/ 5945 திரு. சின்னத்தம்பி துரைராஜா
ந/ 5961 திரு. சின்னக்குட்டி ஞானானந்தன்
ந/ 5965 திருமதி. சிவபாக்கியம் கார்த்திகேசு
ந/ 5974 திரு. துரையப்பா செல்லக்கண்டு
ந/ 5979 திரு. தில்லையம்பலம் நவரத்தினம்
ந/ 5981 திருமதி. தங்கேஸ்வரி பொன்னுத்துரை
ந/ 5985 திருமதி. கதிராசிப்பிள்ளை தம்பையா
ந/ 6004 திருமதி. பத்மாவதி நடராசா
ந/ 6011 திருமதி. ஞானசௌந்தரி மயில்வாகனம்
ந/ 6016 திரு. கனுவல் தம்பிஐயா
ந/ 6023 திரு. சண்முகம் கனகசிந்தாமணி
ந/ 6026 திரு. வைத்திலிங்கம் தர்மலிங்கம்
ந/ 6031 திரு. செல்லையா சிவலிங்கம்
ந/ 6035 திரு. கந்தசாமி கணபதிப்பிள்ளை
ந/ 6041 திரு. செல்லத்துரை மயில்வாகனம்
ந/ 6074 திருமதி. தங்கரத்தினம் நடராசா
ந/ 6076 திரு. பரமானந்தர் சிவசுப்பிரமணியம்
ந/ 6080 திருமதி. தில்லைநாயகி ஐயாத்துரை
ந/ 6100 திருமதி. இரத்தினம்மா துரை
ந/ 6119 திருமதி. பவளம் சுப்பிரமணியம்
ந/ 6122 திருமதி. இரத்தினம்மா முத்துக்குமார்
ந/ 6124 திருமதி. சரஸ்வதி தம்பிஐயா
ந/ 6127 திரு. வே. தம்பிப்பிள்ளை இராசலிங்கம்

(வளரும்)

முதலாம் ஆண்டு திருமண நிறைவையிட்டு
மனமுவந்து வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி க. பார்த்தீபன்
நந்தசுஜா

திரு. க. பார்த்தீபன் - திருமதி - பா. நந்தசுஜா இருவரும் திருமண வாழ்வில் இணைந்து இன்று (20.08.2005) சனிக்கிழமை முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு இத்தம்பதியினர் சீரும் சிறப்புமாய் இன்னும் பல்லாண்டுகாலம் வாழ வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

அப்பா - நாகராசா அம்மா - துரைமணி
அண்ணா - தனந்திரா (பிரான்ஸ்) தம்பி - சுயேந்திரா
மாமா - செல்வராசா குடும்பம் (சுவிஸ்)
மாமா - கமலநாதன் குடும்பம் (இந்தியா)
உற்றார், உறவினர், நண்பர்கள்.

54/19 ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(38994)(51-14)


## மாமனிதர் துரைராஜா நினைவுப் பதக்கம்

யாழ்ப்பாணம், ஓக.20

மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா நினைவு தங்கப்பதக்கம் வழங்குவதற்கு தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை யாழ்.பல்கலைக்கழகம் கோரியுள்ளது.

எதிர்வரும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவிருக்கும் முதலாம், இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்பில் சித்தியடைந்தோரிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்துறைத் திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப்பதக்கங்கள் கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய தேர்ச்சிகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 'உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்' என்னும் முகவரிக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-202)


**Wanted**

Medical Laboratory Technologist for Locum/Permanent Employment from 01.09.2005.

**Medical Director,**
Central Nursing Home (PVT) Ltd,
350, Palali Road,
Thirunelvely.
(39014)(42.11.19)

சிவமயம்

**விற்பனையாளர்கள் தேவை**

கண்ணாடி வியாபாரத்தில்
அனுபவமுள்ளவர்களும் பழக
விரும்புபவர்களும் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம்வழங்கப்படும்.
**த.குமாரசாமி அன் சன்ஸ்,**
**248, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(39077)(42.11.19)

திருமண அழைப்பு

விநாயகர் தர்மசாஸ்தா துணை நிற்க ஸ்ரீகண்ணகா பரமேஸ்வரி அம்பாள்
திருவருளோடு ஆவணி மாதம் 6 ஆம் திகதி (22.08.2005)
திங்கட்கிழமை பழைய நேரம் காலை 6 மணி முதல் 7.30 மணிவரையுள்ள
சுப முகூர்த்தத்தில்

அச்சுவேலி
சிவஸ்ரீ வை. விருத்தகிரீசக்
குருக்களின் ஜேஷ்டகுமாரி
சௌ. மங்களேஸ்வரிக்கும்

எமது கனிஷ்ட குமாரன்
சிரஞ்சீவி
ஸ்ரீ வத்சாங்க சர்மாவிற்கும்

அச்சுவேலி, பத்தமேனி வட பத்ரகாளியம்பாள்
ஆலயத்தில் நடைபெற இருக்கும் சுப முகூர்த்தத்திற்கு வருகை தந்து
சிறப்பாக நடத்தித்தரும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

விரதசமாவர்த்தனம்
(21.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கும்
வதூவர கிருகப்பிரவேசம் திங்கட்கிழமை மாலை
3 மணிக்கும் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிவஸ்ரீ
கு.வை.விருத்தகிரீசக்குருக்கள்
ஸ்ரீமதி.வி.சரோஜினி
தம்பதிகள்.

சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்
(காயத்திரி பீடம் இணுவில்)
ஸ்ரீமதி ம.புவகும்பிகையம்மா
தம்பதிகள்.
(39094)(51-14)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
சாவகச்சேரி

சிறந்த சேவை — குறைந்த கட்டணம்

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க குட்வில்
**புதிய வாகன சுத்திகரிப்பு நிலையம்**
**திறப்பு விழா - 20.08.2005**
சனிக்கிழமை பி.ப.3 மணி

எமது சங்கத்தின் புதிய வாகன சுத்திகரிப்பு நிலையம் இன்று பி.ப.3 மணிக்கு கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் அவர்களால் ஆரம்பிக்கவுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்கள் வாகனங்களுக்கு எம்மால் சகலவிதமான சுத்திகரிப்பு வேலைகளும் சிறந்த முறையில் செய்து தரப்படும். தங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதே எமது சிறந்த சேவையாகும்.

தலைவர்/
இயக்குநர் சபை
பணியாளர்கள்.
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்.
(ச-44545)(42.11.19)

**விமானம் மற்றும் கப்பல் மூலம்**
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கு
20% விசேடசலுகை

**லண்டனுக்கான 5 Kg பொதிக்கு**
**1 Kg க்கான கட்டணம் 500/=**

259, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

பாராட்டி
வாழ்த்துகின்றோம்



இன்று (20-08-2005) Canada, B.C.,
Burnaby Michael J.Fox Theatre இல்
தனது பரதநாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்தும்
திரு.திருமதி பாலசுப்பிரமணியம் - சகுந்தலா
தம்பதிகளின் ஏகபுத்திரியும் Simon Fracher
University மாணவியும் தினவீன கலாசேஷ்திர
நடனப்பள்ளி ஆசிரியை திருமதி வெனன்சி ஜோர்ஜ்
அவர்களின் மாணவியுமான

செல்வி
மேகலா
பாலசுப்பிரமணியம்

அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மேலும் தான்
சார்ந்த துறைகளிலும் உயர்ச்சியையும்
சிறப்புகளையும் பெற
வாழ்த்துகின்றோம்.

"ஜீவனோதயம்",
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

திரு.க.தங்கவேல் திருமதி.க.செல்லப்பாக்கியம்
திரு.த.முருகேந்திரன் திருமதி மு.மகேஸ்வரி
திரு.ச.சிவயோகராஜா திருமதி சி.ஜீவா.
(39040)(50-14)

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கு சர்வோதய நிறுவனம் கடனுதவி

யாழ்ப்பாணம்,ஓக.20

மிதிவெடியால் பாதிக்கப்பட்ட 22 பேருக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனம் கடனுதவி வழங்கியுள்ளது.

மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டே இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த - மிதிவெடியால் பாதிக்கப்பட்ட - 22 பேருக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும்-

2003 ஆம் ஆண்டு மிதிவெடியால் பாதிக்கப்பட்ட 100 பேருக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ஓ-13)

# கோப்பாய் பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்பட்ட நிதியில் ரூ.40 லட்சம்

கோப்பாய்,ஓக.20

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டப் பணிகளிற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 63 வேலைத் திட்டங்களிற்கென 40 லட்சத்து 65 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தில் கல்வியங்காடு, ஆனந்தபுரம் கிராமங்களிற்கான மின் விநியோகம், அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கான அம்புலன்ஸ் தரிப்பிடம், விளையாட்டுக் கழகங்களிற்கான உபகரணக் கொள்வனவு, சனசமூக நிலையத் திருத்தம், தளபாடங்கள் வழங்கல்; பாடசாலைகளிற்குத் தளபாடம், கணனி வழங்கல், கட்டடத் திருத்தம் ஆகியவற்றிற்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் 42 வேலைத்திட்டத்திற்கும், எஸ்.ரவிராஜ் 2 வேலைத்திட்டத்திற்கும், மாவை சேனாதிராசா 4 வேலைத்திட்டத்திற்கும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 3 வேலைத்திட்டத்திற்கும், பத்மினி சிதம்பரநாதன் 4 வேலைத் திட்டத்திற்கும், கே.சிவாஜிலிங்கம் மற்றும் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் தலா ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்கும், கே.சிவனேசன் 6 வேலைத்திட்டத்திற்குமென மொத்தம் 63 வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர் - இவ் வேலைத்திட்டங்கள் யாவும் இந்த ஆண்டிற்குள் பூர்த்திசெய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (9-72)

## 'வாழ்வும் வாக்கும்' நூலுக்குப் பரிசில்



இந்திய அரச வங்கி 2000-2002 வரையான மூன்று ஆண்டுகளில் வெளிவந்த இலக்கிய ஆக்கங்களில் நடத்திய போட்டியில் கலாநிதி நா. சுப்பிரமணியன் எழுதிய 'நால்வர் வாழ்வும் வாக்கும்' என்ற ஆய்வுநூல் 2002 ஆம் ஆண்டுக்குரிய கட்டுரைப் பிரிவில் முதலாவது பரிசிலைப் பெற்றுள்ளது.

பரிசில் பெற்றுள்ள 'நால்வர் வாழ்வும் வாக்கும்' என்ற நூல் நாயன்மார் நால்வர் பற்றிய சமூக வரலாற்று நோக்கிலான ஆய்வாகும். புராண மரபுசார் பார்வையிலிருந்து அவர்களை மீட்டெடுத்து வரலாற்று மனிதர்களாகப் பார்க்க இந் நூலாசிரியர் முற்பட்டுள்ளார்.

மேற்படி நூலுக்கு வடக்கு-கிழக்கு மாகாண சபையின் 2002 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருதும் கிடைத்துள்ளது. (ஐ-9)

## கூட்டுறவு தின விழா

யாழ்ப்பாணம்,ஓக.20

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் கூட்டுறவு தினவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொத்தணித் தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் சி.விஜிதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் விருந்தினர்கள் உரை, அங்கத்தவர்கள் கௌரவிப்பு, பணியாளர் கௌரவிப்பு கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (9-13)



*மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளராகப் பதவியேற்கும் ரீ.ரகுவைக் கௌரவிக்கும் நிகழ்வு மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் விழா நாயகருக்கு யாழ்.நகரப் பகுதி வர்த்தகர்கள் சார்பில் எஸ்.வி.எம்.நிறுவன முகாமையாளர் ரீ.தியாகலிங்கம் மலர்மாலை அணிவிப்பதைப் படங்களில் காணலாம்.*



# பொது மனிதனாக இறுதிவரை வாழ்ந்தவர்

**நீத்தார் நயப்புரை**

"நன்றி மறப்பது நன்றன்று" அதுபோல் ஒருவர் சேவையையும் மறக்கமுடியாது. அச்சுவேலி - தென்மூலையைச் சேர்ந்த செல்லத்துரை ஒரு கிறிஸ்தவராக இருப்பினும் அச்சுவேலி வாழ் அனைத்து மக்களினதும் பொது மனிதனாக இறுதிவரை வாழ்ந்தவர். காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையம் இருந்த காலந்தொட்டே பொலீஸ் - பொதுமக்கள் நல்லுறவுச் சபைத் தலைவராக இருந்து (1970-1974 வரை) பல பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்து வெற்றிகண்டவர். கமநல சேவை நிலையத் தலைவராக விளங்கிய இவர் சிறந்த விவசாயி, பெருந்தோட்டமாக முந்திரிகை உற்பத்தி செய்து வெற்றிகண்டவர். அச்சுவேலி பிரஜைகள் குழு, அரசினர் வைத்தியசாலை பாவனையாளர் சங்கம், சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் அச்சுவேலி மேற்கு கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகவும், அச்சுவேலி மகாவித்தியாலய நலன்விரும்பியாகவும் இன்னும் பல நிறுவனங்களின் வளர்ச்சியில் அயராது உழைத்தவராவார். அச்சுவேலி லயன்ஸ் கழக உறுப்பினராகவும் உற்பத்திக் குழுத் தலைவராகவும் அயராது உழைத்தவர். எளிமையை விரும்பும் இவர், வெள்ளை வேட்டி, சேட்டும் மீசையுடையவராகவும், தொப்பியுடன் அச்சுவேலி நகரில் உலாவிவருவது மறக்கமுடியாத ஒன்று. பெரியவர்கள் தொடக்கம் சிறியவர்கள் வரை மீசைக்கார செல்லத்துரை என்றால் தெரியும். அவர் ஓர் உயர்ந்த வாழ்வையே வாழ்ந்து காட்டி சகல இன மக்களின் அன்பைப் பெற்ற ஒருவர். அவர் போன்ற பொதுநோக்கு உடையவர்கள் சிலரே பூமியில் நீண்டகாலம் சேவை செய்யும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

சேவையே அவரது மூச்சு. சேவையே அவரது பேச்சு "நல்லிணக்கம் தொல்லை இல்லை" என அடிக்கடி கூறி சாதனை பல படைத்தவர். எனவே அச்சுவேலி மக்கள் மனதில் என்றும் நினைவில் நிற்பவர் ஆவார்.

*அச்சுவேலி.* **க.கனகராசா**

# நூல் வரிசை



நூல் : காளி அம்மன் பாடல்கள்
தொகுப்பாசிரியர் : வில்வராணி வரதசுந்தரம்
வெளியிட்டோர் : மணிமேகலைப் பிரசுரம், சென்னை 17.



நூல் : ஆச்சி நீ காளி
ஆக்கியோன் : திரு.வே.வரதசுந்தரம்.
வெளியிட்டோர் : சிவகாமி அம்மன் பப்ளிகேஷன்ஸ்.
25, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு.06.

உலகியல் வாழ்க்கையில் அலைப்புண்டு அலமந்து நிற்கும் மாந்தருக்கு அளப்பிலா ஆறுதலையும் உளச் சாந்தியினையும் அளிப்பது பிரார்த்தனை. நிறைமொழி மாந்தர் பாடிய மறைமொழிகள் ஊனினை உருக்கி உள்ளத்தை நெகிழச் செய்பவை.

இத்தகைய அருட்பாக்களால் ஆகர்ஷிக்கப்பட்ட அடியார்கள் தத்தம் மனத்தில் உபாசிக்கும் தெய்வங்களையும் மனமுருகப் பாடி வழிபடுகின்ற மரபிரனைக் கைக்கொண்டனர். அம்மரபின் வழிவந்த நூல்தான் திருமதி வில்வராணி வரதசுந்தரத்தால் தொகுத்து மணிமேகலைப் பிரசுரமாக வந்திருக்கும் 'காளி அம்மன் பாடல்கள்' தொகுப்பாசிரியரின் கணவர் வரத சுந்தரம் அவர்கள் இயற்றிய 'ஆச்சி நீ காளி' பாடல்களில் வரும் 'சந்தானச் செல்வம் சளைக்காமல் எய்திடச் சந்தனம் சாத்தினோம்.' என்ற வரிகட்கு அமைவாக, வேண்டுவார்க்கு வேண்டியதை அளிக்கும் அபயகரத்தோடும், வேண்டத்தகாத இன்னல்களை அழித்திடும் திரிசூலத்தோடும் அழகிய சந்தனச் சாத்துப்படியில் அமர்ந்திருக்கும் பத்திரகாளி அம்பாளின் தோற்றம் தாங்கிய முகப்பு அட்டைப் படமே பார்க்கப் பரவசப்படுத்தும் படியாக உள்ளது. தற்கால தொழில்நுட்ப கணனிகள் பதிவுசெய்த ஏதோ ஒரு காளியம்மனைப் போடாது சாட்சாத் பத்திரகாளி அம்பாளைப் பிரதிபண்ணி இருப்பது இந்நூலை எடுத்ததுமே பக்தியினால் கைகூப்ப வைக்கின்றது. உள்ளே நுழைந்தால் உள்ள விடயங்களோ வியப்பில் ஆழ்த்துபவை. அம்பிகையின் நாமங்கள், அபிராமி அந்தாதி, ராகுகால துர்க்க அஷ்டகம், ரோக நிவாரணி அஷ்டகம், காளி கவிமாலை, நவராத்திரிப் பாடல்கள், திருமகள் நாமாவளி, இலக்குமிதுதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், திருவிளக்குப் பூசை, கேதாரகௌரி விரதம் போன்ற அருட் பாக்களும் திருகோணமலையில் கொலு வீற்றிருந்து கோலோச்சும் அருள்மிகு பத்திரகாளி அம்பாள்மேல் பாடப்பட்ட ஆச்சி நீ காளி, தாயிடம் சென்றுகேள், திருவூஞ்சல், திருக்குளிர்ச்சிக் கவிகள், அம்பாள் காவியம், மங்களம் என அளவிடமுடியாத கருவூலப் பொக்கிஷங்கள் காணப்படுகின்றன.

பழங்காலந்தொட்டுவரும் காளி வணக்கம் பண்பாட்டின் சொத்தாகி முத்திக்கு வழிகாட்டும் இந்நூல்கள், சைவமக்கள் அனைவரது இல்லங்களிலும் இருக்க வேண்டியவையாகும்.

*-நாயன்மார்கட்டு* **ப.மகேந்திரதாசன்.**



நூல் : தேயாத நிலவுகள்
ஆக்கம்: செல்வி ஆரபி சிவஞானராஜா
வெளியிட்டோர் : தேசிய கல்வியியற் கல்லூரி.

சமூக சிந்தனையுடன் கூடிய சமூகத்தை நல்வழிப்படுத்தும் பார்வையைக் கொண்ட சிறுகதைகளே மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றன. இந்தவகையில், செல்வி ஆரபி சிவஞானராஜாவின் சிறுகதைகள் சமூக உணர்வுடன் கூடிய கருத்தோட்டத்தைக் கொண்டுள்ளன.

மாற்றங்கள் இங்கே மறுப்பதற்கில்லை, மனங்கொத்தி மனிதர்கள், இந்தப் பூக்கள் பறிப்பதற்கல்ல, தேயாத நிலவுகள், அவர்களும் மனிதர்கள் தான் ஆகிய தான் எழுதிய ஐந்து சிறுகதைகளைத் தொகுப்பாக்கி "தேயாத நிலவுகள்" என்ற தலைப்பில் நூலுருவாக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ் நிலை ஆசிரியரான செல்வி ஆரபி சிவஞானராஜாவின் இந்த நூல் தொகுதியினை தேசிய கல்வியியற் கல்லூரியினர் வெளியிட்டுள்ளனர்.

இச்சிறுகதைத் தொகுதி நூலில் உள்ள கதைகள் சமூக சீரழிவுகளைப் பற்றியும் அவற்றில் இருந்து விடுபடக்கூடிய மனித எண்ணங்கள், நடவடிக்கைகள் சிந்தனைகள் பற்றியும் எடுத்துக் கூறுவனவாக அமைகின்றன.

ஆசிரியர் தமது இயல்பான நிலையில் எளிய வார்த்தைகளால் சகலரும் படித்து விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் சிறுகதைகளை எழுதி உள்ளார்.

இவரது எழுத்துக்கள் தூண்டிவிடும் எண்ண உணர்வலைகள் சமூகச் சீரழிவுகளைச் சீர்திருத்தும் வழிகாட்டியாக அமைகின்றன. இத்தகைய,சிறுகதைகள் பல வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**விஸ்வபாரி.**



நூல் : அரை நிமிட நேரம்
ஆக்கம்: திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
அச்சுப்பதிப்பு : பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கோப்பாயைச் சேர்ந்த திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஈழத்தின் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் எழுதிய ஞானச் சுடரில் வெளிவந்த முப்பது படைப்புக்கள் 'அரை நிமிட நேரம்' என்னும் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதனை பாரதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இந்நூலில் அடங்கியுள்ள படைப்புக்கள் சுயவிசாரணை சார்ந்தவை, இறை பெருமை பேசுபவை, மரணம் மற்றும் இறுதிநிலை பற்றியவை என மூன்று விதமாக வகைப்படுத்தலாம்.

மனம், மனம் சார்ந்த உரையாடல் என அமைகின்ற முதல் வகைப்படைப்புக்கள் சுயவிசாரணைகளாக அமைகின்றன. இறைபற்றிய கருத்தியல் வெளிப்பாடுகள் இரண்டாவது வகை சார்ந்து வருகின்றன.


மரணம், இறுதிநிலை, வாழ்வியல் போன்றவற்றைப் பேசும் படைப்புக்கள் மூன்றாம் வகையைச் சேர்ந்தவையாக உள்ளன.

இப்படைப்புக்கள் சிறுவர் முதல் முதியவர் வரை யாவரும் விளங்கிப் பயனுறத்தக்கனவாகவும், எளிய மொழிப் பிரயோகங்களினூடே பெருந்தத்துவார்த்த கருத்தியல் வெளிப்பாடுகளை வெளிக்கொணர்வனவாகவும் அமைந்துள்ளன.

இந்நூலாசிரியர் முயன்றுழைத்து மேலும் பல அரிய நூல்களைப் படைத்தளிக்க வேண்டும். அதன்மூலம் பிறந்த மண்ணிற்குப் புகழ் சேர்த்துத் தரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*இந்துநாகரிகத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

**திருமதி சுகந்தினி சிறீமுரளிதரன்,**
**சிரேஷ்டவிரிவுரையாளர்.**



நூல் : தாயகம்
ஏப்ரல் - ஜூன்2005

தாயகம் கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டிதழின் ஏப்ரல் - ஜூன் காலாண்டுக்குரிய வெளியீடு வெளிவந்துள்ளது.

தொழிலாளர் எழுச்சியைச் சித்திரிக்கும் முன்பக்கப் படத்துடன் வெளியாகியுள்ள இவ்விதழில் த.ஜெயசீலன், எஸ்.ஜி.கணேசவேல், இயல்வாணன், அ.சந்திரஹாசன்,செவ்வழகன், ஸ்வப்னா, அழ.பகீரதன், பத்தனையூர் வே.தினகரன், பா.தீபக்செல்வன், எஸ்.யாதவன் ஆகியோரின் கவிதைகளும் வனஜா நடராஜா, கே.ஏ. சிவரட்ணம், ஸ்ரீ.மொழி வரதன் ஆகியோரின் சிறுகதைகளும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழியாக்க நாடகம், சிவசேகரம், சோ.பத்மநாதன்,சிவ.இராஜேந்திரன், சோ.தேவராஜா ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

**-சிவரஞ்சனி.**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

6 ROLLER POUCH Laminating mecine - Bio - 330 New model இரண்டு மாதம் மட்டும் பாவிக்கப்பட்டது விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3126464, 021 222 5609. (39068)

புதிய LG DVD HOME THEATOR SYSTEM மற்றும் SINGAPORE DECORATIONS விற்பனைக்குண்டு. இல.360/5, பிரதானவீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777-575701. (39081)

புதிய டிஜிற்றல் வீடியோ JVC Model No - 160 x, டிஜிற்றல் கமெரா Casio Qv-R40, கையடக்கத் தொலைபேசி motorola V 545, கையடக்கத் தொலைபேசி NOKIA 8310 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி. 021 222 2573. (சி-44554)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் சந்தி, மருதனார்மடம் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் காணி வலது ஒழுங்கையில் வீட்டுடன் இரண்டு பரப்பும் 5.5 குழியும் உடைய விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு காலை 9 மணி - மாலை 4 மணி வரை. தொடர்பு: ச.சிவராஜா (இலங்கை) T.P.: 021 222 5922, P.தர்மநாதன் (ஆஸ்திரேலியா) T.P.: 0061298633 660. (39047)

## காணி விற்பனைக்கு

கந்தர்மடத்தில் 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 222 6574. (39088)

## வீடும் காணியும் விற்பனைக்கு

ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஆறு பரப்புடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 618 0694. (38973)

## நாய்க்குட்டி விற்பனை

குறைந்த விலையில் Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-44552)

## இறைச்சிக் கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-44491)

## வாடகைக்கு

யாழ்.நகருக்குள் மேல்மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. (கந்தோர் பாவனைக்கு மட்டும்) தொடர்பு: 021 222 3239. (38952)

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி (பஸ்தியான் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 0777 593722, 0776 991899. (38049)

கொக்குவில், பூநாறி மரத்தடியில் சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் உடைய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 021 222 5062, 077 3269486. (39066)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975 ஆம் ஆண்டு, பூர நட்சத்திரம், 38½ கிரகபாவமுடைய, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்குத் தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம். 2675, C/o. உதயன், யாழ்ப்பாணம். (39054)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979இல் பிறந்த, உத்தரம் 3ஆம் பாதம், 2 இல் செவ்வாய், 18 கிரகபாவமுடைய அரச பதவி வகிக்கும் பட்டதாரிப் பெண்ணுக்கு 30 வயதுக்குள் உள்ள அரச பதவி வகிக்கும் நற்குணமுடைய பட்டதாரி மணமகன் தேவை. தொடர்பு: 0777 - 436472. (39073)

## தவறிவிட்டது

உரும்பிராய், இணுவில், பண்டத்தரிப்பு, அளவெட்டி, ஏழாலை பகுதிகளில் காரின் வீல்கப் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: ஞானவைரவர் கோயிலடி, உரும்பிராய். T.P.No. 0777 111723. (39058)

துரைராஜா குயின்ரனின் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, இத்தாலி அடையாள அட்டை, குயின்ரன் மரிய கொறற்றியின் தேசிய அடையாள அட்டை 16.08.2005 மடுவிலிருந்து வவுனியா வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 9/5, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம். T.P.No. 0779 229040. (39070)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் 42/=, பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி,நல்லூர். (38679)

## மணமகள் தேவை

அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடம், வயது 44, பாதுகாப்பு உத்தியோகத்தரான மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை. நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். திருமண சேவை ஸ்தாபனங்களும் தொடர்புகொள்ளலாம். தொடர்பு: சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர் (இராணுவ முகாமிற்கு முன்பாக). (38772)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 07.08.1979 ஆம் ஆண்டு, உத்தராடம் நட்சத்திரம், லண்டன் குடியுரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 077 3086797. (சி-44580)

## ஜோதிடம்

கைரேகை ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்தியப் பரம்பரைஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39091)

## கோழிக்குஞ்சு, கோழித்தீன் விநியோகம்

Original Prima Broiler குஞ்சுகள் 42/= பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 மாலை விநியோகிக்கப்படும். அத்துடன் Original Prima கோழித்தீன்பெற்றுக்கொள்ளலாம். சிவகலை களஞ்சியம் - கோப்பாய், உடுவில் பாம் சென்ரர் (கமநல சேவைகள் சுற்றுவட்டம்) ஆலடி, உடுவில். நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர். (39072)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துக் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## எவரெஸ்ட் கருவேலன் பற்பொடி

*இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட கருவேலன் பற்பொடி பற்சூத்தை, முரசுகரைதல், வாய்நாற்றம் ஆகியவற்றைத் தடுப்பதுடன் பற்களையும் நன்கு மிளிரச்செய்யும்.*

*பற்தூரிகைகள் கொண்டு பல்துலக்கும் நீங்கள் பின்பு கருவேலன் பற்பொடி கொண்டு பல்துலக்கி பற்களையும் முரசுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அனைத்து வியாபார நிலையங்களிலும் கருவேலன் பற்பொடி என்று கேட்டு வாங்குங்கள்.*

*தயாரிப்பு:*

**எவரெஸ்ட் மருந்தகம்,**

வட்டு. - வடக்கு, சித்தன்கேணி

*மொத்தமாக பெற்றுக்கொள்ள:*

எவரெஸ்ட் கிளை - அல்வாய் - 021-2263469
வேல் மருந்தகம் - கொடிகாமம் - 0777 112410
0773144873

(P-44579)(33-14-15-42)

## கருங்குளவி கொட்டி 2 சிறுமிகள் காயம்!

தென்மராட்சி,ஓக.20

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இரண்டு சகோதரிகளைக் கருங்குளவிகள் கொட்டின. இச்சம்பவம் அண்மையில் மட்டுவிலில் இடம்பெற்றது.

கூட்டிலிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியில் வந்த பொதுமக்களைத் துரத்தியதாகவும், அப்போது சைக்கிளில் வந்த இரு சகோதரிகளும் குளவிகளினால் மோசமாகக் கொட்டப் பட்டனர் என்றும் கூறப்பட்டது. இவர்களில் ஒருவர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு சாவகச்சேரி வைத் தியசாலையில் சேர்க் கப்பட்டார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த க.அபிரா (வயது 12), க.கவிநீதா (வயது 10) ஆகியோரே கருங்குளவிகளினால் தாக்கப்பட்டவர்களாவர்.(9-117)

## Organ / Violin Notes

Organ, Guitar, வயலின்,வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகள் 1-40, கேள்விஞானம் ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு.

**S.S.Rajeendran**
75, Temple Rd., Nallur, Jaffna.
T.P: 0713055991
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500M தெற்கே)

## காணியுடன் பெரிய கட்டடம் விற்பனை

*வட்டுக்கோட்டைக்கு அண்மையில் 15 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன்கூடிய 8,000 சதுர அடிக் கட்டடம் விற்பனைக்குண்டு. மின்சாரம் 3 பேஸ், நன்னீர் கிணறு, 9' உயர சுற்றுமதில், பெரிய வாகனத் தரிப்பிட வசதி உண்டு. தொழிற்சாலைகள், தனியார் வைத்தியசாலை, திருமண மண்டபம் முதலியவற்றுக்கு உகந்தது. மேல்மாடி வீடாகவும் பாவிக்கலாம்.*

தொடர்பு: T.P.077 6589400

(39064)

## இரண்டாம் ஆண்டு நினைவு

பிறப்பு 14 09 1936



இறப்பு 20 08 2005

செல்வி மீனாம்பிகை இராமநாதன்

திதி: 27.08.2005 அபரபக்க அட்டமி

*எம்மோடு வாழ்ந்து எமைவிட்டுப் பிரிந்து*
*ஈராண்டுகள் சென்றனவோ?*
*சிந்தை குளிரவைத்து நித்தம் துயர்துடைப்பாய்*
*பித்தம் எமக்கேற பிரிந்து சென்றதேனம்மா?*
*தங்கள் ஆத்மசாந்திக்காய் எல்லாம்வல்ல*
*வீரபத்திரரை இறைஞ்சுகின்றோம்.*

கந்தையா வீதி,
சாவகச்சேரி.
0777 427175

(C/44586)(33-14-15-42)

*திரு.திருமதி K.துரைரத்தினம்,*
*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*



கிளிநொச்சி மாவட்டத்தில்

# விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவுசெய்ய அரச அதிபருக்குத் திறைசேரி நிதி வழங்கியது

பரந்தன்,ஓக.20

கிளிநொச்சி மாவட்டத்தில் 2005 சிறுபோக நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்கு திறைசேரி வழங்கிய 10 மில்லியன் ரூபா பணத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

இந்த நிதியின் மூலம் முதற்கட்டமாக சிறுபோக நெல் உற்பத்தியினை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை மேற்கொள்ளவேண்டும் எனவும், ஒரு விவசாயியிடமிருந்து 10 மூடை நெல் மட்டும் முதலில் கொள்வனவு செய்யப்படவேண்டுமெனவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுத் தலைவரின் சிபார்சுக்கமையவே இந்த நெல் கொள்வனவு நடைபெறவேண்டுமெனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் சகல வழிகளிலும் தரத்தைப் பேணி விவசாயிகளின் நெல்லைச் சந்தைப்படுத்துவதற்குத் துரித நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் நெல்லைக் கையளிக்க விரும்பும் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் அரச அதிர் மேலும் தெரிவித்துள்ளார். (8-352)




## சுகாதாரமற்ற முறையில் கொண்டு செல்லப்பட்ட 600 இறாத்தல் பாண் அழிப்பு

ஒட்டுசுட்டான்,ஓக.20

சுகாதாரமற்ற முறையில் விநியோகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட 600 இறாத்தல் பாண் சுகாதாரப் பிரிவால் கைப்பற்றப் பட்டு அழிக்கப்பட்டன.

அண்மையில் வவுனியா நகரில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, செயலக சுகாதாரப் பிரிவினர் வவுனியாவில் திடீர் சோதனையை மேற்கொண்டனர். வாகனத்தில் சுகாதாரமற்ற முறையில் விற்பனைக்குக் கொண்டு செல்லப்பட்ட 600 இறாத்தல் பாணும் 300 பணிஷ்களும் கைப்பற்றப்பட்டு வவுனியா சுகாதார வைத்திய நிலையத்தில் வைத்து அழிக்கப்பட்டன.

வவுனியாவிலுள்ள வெதுப்பகங்கள், உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சுகாதாரப் பிரிவினர் திடீர் சோதனைகளை மேற் கொண்டுவருகின்றனர். (8-202-341)

## வீதிப்புனரமைப்பு மந்த கதியில்; பொதுமக்கள் போக்குவரத்து பாதிப்பு

பரந்தன்,ஓக.20

உருத்திரபுரம் வீதிப் புனரமைப்பு மந்த கதியில் நடைபெற்றுவருவதால், பயணிகள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

வீதிப்புனரமைப்பை மேற்கொள்வதற்கு வீதிக்கு முதலில் கொட்டப்பட்ட கல் திரும்ப ஏற்றப்பட்டு மீண்டும் வீதிப் புனரமைப்புக்கு ஏற்ற கல் கொட்டப்பட்டு புனரமைப்புப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுவதால், போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்வதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

உருத்திரபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். தற்போது இந்த வீதியூடான பேரூந்து சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

வீதிப்புனரமைப்பை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் வரும் மழைக்காலத்திற்கு முன்னர் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறும், நிறுத்தப்பட்ட பேரூந்துச் சேவையை மீள ஆரம்பிக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (8-352)

## கிளிநொச்சி பொதுச் சந்தையில் தீ விபத்தினால் 10 கடைகள் எரிந்தன

கிளிநொச்சி,ஓக.20

கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தீ விபத்தில் வியாபார நிலையங்கள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

இரவு 10.45 மணியளவில் ஏற்பட்ட தீயினால் 10 இற்கும் மேற்பட்ட தொடர் கடைகளில் தீப்பிடித்ததுடன் கடைக்குள் இருந்த வியாபாரப் பொருள்கள் அனைத்தும் முற்றாக அழிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்து ஏற்பட்ட வியாபார நிலையங்களுக்கு அண்மையில் தங்கியிருந்தோர்களால் ஏனைய வியாபாரா நிலையங்களுக்கும் தீ பரவாதவாறு கட்டுப்படுத்தப்பட்டதாகவும், தீப்பிடித்த கடைகளின் கூரைகள் தென்னோலைகளால் வேயப்பட்டிருந்தமையாலேயே தீ விரைவாகப் பரவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறு தீ பற்றியது என்று தெரியவரவில்லை. (8-ரி-352)

## மிதிவெடிகள் அகற்றப்படவில்லை

ஓட்டுசுட்டான்,ஓக.20

ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்திற்குட்பட்ட காக்கைப் பணிக்குளத்தின் கீழுள்ள காணிகளில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் இதுவரை அகற்றப்படவில்லையென கமநலச்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பின் போது குளத்தின் அணைக்கட்டுக்கள், விவசாய நிலங்கள் என்பனவற்றில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டதாகவும் அவை அகற்றப்படாமையால் விவசாயச் செய்கை, குளத்தின் புனரமைப்புப் பணிகள் என்பனவற்றை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (8-341)



இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அதன் முல்லைத்தீவுக் கிளையில் அண்மையில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த வைபவத்தின்போது புதுக்குடியிருப்புப் பங்குத்தந்தை அருட்திரு. ஞானப்பிரகாசம் மங்கள விளக்கை ஏற்றிவைப்பதையும், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி வள்ளியம்மை மகாலிங்கசிவம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படம்:- புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

## ஆஸ்திரேலியாவை அசத்திய 'ரிவர்ஸ் ஸ்விங்'

'இங்கிலாந்து பந்துவீச்சாளர்களின் 'ரிவர்ஸ் ஸ்விங்' முறை பந்து வீச்சே ஆஸ்திரேலிய அணியின் தடுமாற்றத்திற்கு முக்கிய காரணம்' என்கிறார் ஆஸி. வீரர் ஜஸ்டின் லாங்கர்.

கிரிக்கெட்டில் தற்போது வீழ்த்த முடியாத அணியாக ஆஸ்திரேலியா கருதப்படுகிறது. அவர்களையும் வீழ்த்த ஓர் ஆயுதம் இருக்கிறது என்கிறார்கள் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள். ஆஷஸ் தொடரில் 'ரிவர்ஸ் ஸ்விங்' வகையிலான பந்து வீச்சே ஆஸ்திரேலிய அணி திணறலுக்கு முக்கிய காரணமாக கூறுகிறார் தொடக்க ஆட்டக்காரர் ஜஸ்டின் லாங்கர். அடுத்த டெஸ்ட் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த லாங்கர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

ஆஷஸ் தொடர் எங்களுக்கு பெரும் சோதனையாக அமைந்து விட்டமை உண்மைதான். இந்த தொடரில் எங்கள் அணி வீரர்கள் ஏன் தடுமாறுகிறார்கள் என்பதை யோசித்துப் பார்த்தோம். இங்கிலாந்து வசம் ஒரு வலுவான ஆயுதம் உள்ளது. அதுதான் 'ரிவர்ஸ் ஸ்விங்'. இந்த வகை பந்துகளை யாரும் வேகமாக அடித்து விளையாட முடியாது. பந்து வரும் திசையை கூர்ந்து கவனித்து விளையாடினால் மட்டுமே தப்பிக்க முடியும். பிளின்டோப், சைமன் ஜோன்ஸ் இதை மிகச் சரியாக பயன்படுத்தினார்கள். 'ரிவர்ஸ் ஸ்விங்' பந்து வீச்சை நீக்கி பார்த்தால் சைமன் அச்சுறுத்தலான பந்து வீச்சாளராக கூற முடியாது. இவ்வாறு லாங்கர் கூறினார். (ஒ)

## உலகக் கிண்ண தகுதிப் போட்டி: ஆசியாவில் ஜப்பான் முன்னிலை

உலக கோப்பை தகுதிச் சுற்று உதைபந்தாட்ட தொடரில் ஆசிய மண்டலத்தில், ஜப்பான் அணி முதலிடம் பெற்றது.

2006ஆம் ஆண்டு ஜேர்மனியில் உலகக்கிண்ண உதை பந்தாட்டத் தொடர் நடக்க உள்ளது. இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு இடங்களிலும் நடக்கின்றன. ஆசியாவிலிருந்து ஜப்பான், ஈரான், சவுதி அரேபியா, தென் கொரியா ஆகிய நான்கு அணிகள் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதையடுத்து, தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில், ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தை நிர்ணயிக்கும் போட்டி நடந்தது. இதில் 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ள ஜப்பான் 2-1 என்ற கோல் கணக்கில் ஈரானை வீழ்த்தியது. இதன் மூலம் ஜப்பான் 15 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றது. ஈரான் 13 புள்ளிகளுடன் இரண்டாம் இடம் பெற்றது.

'ஏ' பிரிவில் சவுதி அரேபியா 1-0 என்ற கோல் கணக்கில் தென் கொரியாவை வென்றது. சவுதி அரேபியா 14 புள்ளிகளுடன் முதலிடத்தையும், தென் கொரியா 10 புள்ளிகளுடன் இரண்டாம் இடமும் பெற்றன. மற்றைய போட்டிகளில் 'ஏ' பிரிவில் உள்ள உஸ்பெகிஸ்தான் 3-2 என்ற கோல் கணக்கில் குவைத்தையும், 'பி' பிரிவில் உள்ள வட கொரியா 3-2 என்ற கோல் கணக்கில் பஹ்ரைனையும் வென்றன. (ஒ)

## பயிற்சியாளர் தலையில் பழி

அடுத்தடுத்தது படு மோசமான தோல்விகளைச் சந்தித்த சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து பில் சிம்மன்ஸ் அதிரடியாக நீக்கப்பட்டார்.

சிம்பாப்வே கிரிக்கெட் அணி விளையாடும் போட்டிகளில் எல்லாம் தோற்கிறது. அந்த அணி வீரர்களின் செயற்பாடுகள் படு மோசம். ஆகவே, அணி பயிற்சியாளர் பில் சிம்மன்ஸ் (மேற்கிந்தியா) செயற்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. குறிப்பாக, நியூஸிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் கிடைத்த படுதோல்விகள், அதிருப்தியை ஏற்படுத்தின. இதனையடுத்து பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து சிம்மன்ஸ் அதிரடியாக நீக்கப்பட்டார். அவருக்குப் பதில் புதிய பயிற்சியாளராக சிம்பாப்வே அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கெவின் கரன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ)

## விளையாட்டு

## கோக்குவில் மத்திய ச.ச.நிலையம் நடத்தும் கூடைப்பந்தாட்ட இறுதியாட்டங்கள் நாளை

யாழ்ப்பாணம்,ஓக.20

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டியின் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளின் இறுதியாட்டங்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ளன.

இறுதியாட்டங்களில் பெண்கள் பிரிவில் பிற்பகல் 4 மணிக்குக் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் பட்டர் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன

ஆண்கள் பிரிவில் பிற்பகல் 5 மணிக்கு சென்றலைஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். பல்கலைக்கழகமும் மோதுகின்றன.

இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பிலும் பிரதமவிருந்தினராக ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்துகொள்வார். (ஒ-190)

## கூடைப்பந்தாட்ட சங்க நிர்வாகிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று மாலை 5 மணியளவில் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு செயலாளர் பிரசன்னா கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-190)

## யாழ். அணித் தெரிவுக்கான கூடைப்பந்தாட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.20

எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. இதற்காக யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் தங்கள் வீர, வீராங்கனைகளைப் பயிற்சிக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் பிரசன்னா கேட்டுக் கொண்டுள்ளார்.

பெண்களுக்கான பயிற்சி கடந்த புதன் கிழமை தொடக்கம் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுவதாகவும்,

ஆண்களுக்கான பயிற்சி நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-190)

**N.E.I நல்லூர்**

இராஜ வீதி, யாழ்ப்பாணம்

**கலைப் போட்டிகள்**

1. கட்டுரைப்போட்டி 2. கவிதைப்போட்டி
3. பேச்சுப்போட்டி
4. பொது அறிவு வினாடி வினாப் போட்டி
★ பாடசாலை மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

விண்ணப்ப முடிவு:- 25.08.2005

விவரங்கள்:- **N.E.I. யூனிவேர்சல் நிறுவனங்களில்.**

(39050)(19-45-39)


# நிவாரணப் புள்ளி கொடுப்பனவு

தென்மராட்சி ,ஓக.20

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான ஜூன் ,ஜூலை மாதங்களுக்கான நிவாரண முத்திரைப் புள்ளிக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இல.37, 39 ,41 ,43,45 ,47,49,51 ஆகிய எட்டுப் புள்ளிகளுக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்தச் சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்படுவதாகவும் -

இம்மாத இறுதிக்குள் இக்கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)


Canadian Red Cross

Croix-Rouge canadienne

SRI LANKA RED CROSS SOCIETY

## THE CANADIAN RED CROSS DELEGATION

**In cooperation with the Sri Lanka Red Cross Society, Kilinochchi Branch**

Seeks to fill the following key positions in its project implementation office in Kilinochchi with persons best meeting the qualification, skill profile and work experience. We offer long term contracts and an attractive remuneration package.

### 1. OFFICE ADMINISTRATOR (O1)

**Key tasks & Responsibilities**

This is an multi task sub- professional supervisory administrative position responsible mainly for administrative, accounting, coordination and facilitation; managing and reporting on funds, properties and premises under the project coordination office in Kilinochi. The person he/she operates under the general supervision of the delegate responsible for Kilinochi Office following the guidelines and procedures from the Canadian Red Cross Delegation in Colombo. The incumbent is required to function independently in planning and organizing and providing efficient administrative support.

**Qualification, Skill and Experience Requirements**

1. A diploma in business administration from a recognized institution, with at least 3 years progressive experience in office Administration and some accounting knowledge. A working experience with international NGO and working with expatriates is preferred.
2. A very good command of English language both spoken and written and must speak Tamil.
3. A good computer skill and knowledge of standard office soft wares (Word and excel.)
4. Candidate must be a team player with capacity to operate in multi cultural setting. Must feel confident and comfortable making a decision.
5. Ability to operate in tight schedules and dead lines and capacity to handle multi tasks. A matured personality with developed sense of responsibility and team spirit.

### 2. LOGISTICS ASSISTANT (01)

**Duties and Responsibilities**

This is a semi technical/clerical job with responsibilities of carrying out logistical tasks such as transport management and coordination, handling local procurement, arrangement and follow up of monthly supplies from Colombo, attending and supervising the generator operation and supply of fuel to generators, facilitating with local government agencies regarding procurement, transport, Coordinates movement notification for staff, cargo and vehicle with ICRC Kilinochchi and CRC Colombo. The logistics assistant operates under the direct supervision of Office administrator and his main task is to assist the office administrator in providing logistical support to the medical team assigned to Kilinochchi hospital.

**Qualification Requirements**

1. A GCE (AL) examination and a minimum of two years experience in administration, procurement, and transport or store management.
2. Must have a good command of English language both spoken and written with. English language certification is an advantage Must be able to speak and understand Tamil.
3. A working experience with International NGO is preferred.
4. Computer literacy in MS Office ( Word and excel)
5. An honest, reliable and organized person with good communication skills.

### 3. DRIVERS (02)

**REQUIRMENTS:**

Language: Fluent in English
Driving certification: Driving License Level A
Driving Experience:At least 2 years of Driving 4 WD and knowledge of roads.
A working experience with International NGO is preferred.

Please send your applications with a covering letter indicating for which position you apply. Include also copy of your diploma/ certificate and relevant credentials with Bio data( CV) showing employment history, contact numbers and references.. Address your applications to the Hony. Secretary, Sri Lanka Red Cross Society, Kilinochchi Branch; Kannan Temple Road, Kilinochchi.

**Deadline for applications : 31 st August 2005**


## விவசாயக் கிணறுகள் புனரமைப்பு

சர்வதேச 'கெயர்' நிறுவனம், மாதகல் பகுதியிலுள்ள 10 விவசாயப் பங்குக் கிணறுகளை புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. மாதகலில் 'கெயர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்பட்டு வரும் வயல் பாடசாலைக் குழுவின் ஊடாக இந்தப் 10 விவசாயப் பங்குக் கிணறுகளையும் புனரமைப்புச் செய்து கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் -

விரைவில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் -

'கெயர்' நிறுவனத்தின் வெளிக்களத் திட்ட அலுவலர் வை.சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-135)

## கடற்றொழில் உபகரணங்கள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு, மாமுனைப் பகுதியில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகளின் ஆதரவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் முயற்சியினால் யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் மாமுனைப் பொது மண்டபத்தில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்கிறார்.

(ஐ-9-117)


**லயன்ஸ் கழகம் மல்லாகம்/தெல்லிப்பழையும் லயன்ஸ் கழகம் மானிப்பாய் வட்டமும்**

We Serve

இணைந்து நடத்தும்

## இலவச மருத்துவ முகாம்

காலம் : நாளை (21.08.2005) ஞாயிறு காலை 8.30 முதல்

இடம் : மல்லாகம் மகாவித்தியாலயம் (மல்லாகம் சந்தி)

இம்முகாமில் சேவையாற்ற இருக்கும் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகளின் விவரம்:

1) வைத்தியகலாநிதி நவமலர் கனகரட்ணம்
2) வைத்தியகலாநிதி ருக்மணி உதயகுமார்
3) வைத்தியகலாநிதி ஜெயந்தி சேனாதிராஜா
4) வைத்தியகலாநிதி V.மயூரன்
5) வைத்தியகலாநிதி N.சக்திவேல்

இம்முகாமில் பிரபல மெடிக்குவிக் (MEDIQUICK) ஸ்தாபனத்தினால் இலவச ஆய்வுகூட பரிசோதனைகளும் வழங்கப்படும்.

மல்லாகம் / தெல்லிப்பழை, ஏழாலை மற்றும் அளவெட்டிப் பகுதிகளில் வசிக்கும் வசதிகுறைந்த மக்களைப் பயன்பெறும்படி வேண்டுகிறோம்.

*குறிப்பு:* நோயாளிக்குரிய மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்.

லயன் ச.ஆறுமுகநாதன்
கழகத் தலைவர்,
மல்லாகம் / தெல்லிப்பழை.

லயன் ச.ஸ்ரீநிவாசன்
கழகத் தலைவர் ,
மானிப்பாய் வட்டம்.

(சி/44594)(22-15-45)


## ஆண்டு ஒன்றின் நினைவஞ்சலி

மலர்வு 12 - 11 - 1918



உதிர்வு 20 - 08 - 2004

### திருமதி இராசையா மத்தீனம்மா

*அன்றைமை ஆறாத் துயரத்தில் ஆழ்த்திய*
*அன்புத் தந்தை பிரிந்த பின்னே*
*அன்னையாய் தந்தையாய் அனைவர்க்கும் ஊன்றுகோலாய் -நின்று*
*எம்மையெல்லாம் அவயத்து முந்தி இருக்கச் செய்த தெய்வமே !*

*தங்கள் பயன்கருதா பாசமும்*
*உற்றுளி உதவும் அறிவுரைகளும்*
*ஓயாது உறங்காது உழைத்த உழைப்பும்*
*பாரினில் நாம் உயர ஏணியாய் நின்றதே!*

*நீங்கள் எம்மீது சொரிந்த இலட்சிய மலர்களை*
*நாங்கள் மாலையாக்க முயல்வோம்*
*உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற*
*நிதமும் வேண்டி நிற்கின்றோம்.*

*பிரிவால் துயருறும்:*

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*34, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.* (39102)(42-18-13)

## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசரத்தினம்

*(முன்னாள் சாலைப் பரிசோதகர் - இ.போ.ச., செயலாளர் - நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தானம், சமாதான நீதிவான் )*



இலக்கம் 21, மூத்தவிநாயகர் வீதி, முதலாம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னையா இராசரத்தினம் அவர்கள் 18.08.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் தேவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ருக்குமணிதேவி, இராஜலட்சுமி, பிச்சேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் றஜிதா,றஜீகரன் (லண்டன்), றஜீந்திரன் (பாபு - கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தராஜா (உரிமையாளர் - வசந்தன் பல்பொருள் வாணிபம்), சுபாஜினி (லண்டன்), மங்களேஸ்வரி, மணிவண்ணன் (டுபாய்), ஜெயானந்தம், வசந்தகுமாரி, ரஜனி, ஸ்ரீகாந்தன், ரஞ்சனா, கலைவாணி, சங்கீதா, மைதிலி ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானன், டிலாந்தினி, சஜீஷ் (லண்டன்), டினோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் சோமசேகரம் - காலஞ்சென்ற நாகேஸ்வரி, பரமானந்தம் - கமலேஸ்வரி, ரஞ்சனாதேவி - இந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காந்தினி,பாமினி, கஜரூபன், நந்தரூபன் ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**றஜீந்திரன் (மகன்- பாபு, கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்).**

*இல. 21, மூத்தவிநாயகர் வீதி, முதலாம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.* (39103) (18-13)

# புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்த நோர்வேயிடம் ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, ஓக.20

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதால் அதனைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று நோர்வேயிடம் தெரிவித்துள்ளது அரசு. இது தொடர்பான யோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனை கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேசியபோது தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் சுகாதாரத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா, அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை நேற்றுமுன்தினம் அறிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையினையடுத்து, போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதையும் இதனை மீளாய்வு செய்யவேண்டியதன் கட்டாயத்தையும் அரசாங்கம் உணர்ந்துள்ளது. இதனை நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகப் புலிகளுக்கு அறிவித்துள்ளோம். போர்நிறுத்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதென்பது இரு தரப்பினரின் கைகளிலும் தங்கியுள்ளது. போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்போமென புலிகள் வார்த்தைகளால் மட்டுமே கூறிவருகிறார்கள்; இதில் வாய்ச் சொல் மட்டும் போதாது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னரும் கொலைகள் தொடர்கின்றன. இதனால் ஒப்பந்தம் பாதிக்கப்படும் அபாயம் இருக்கின்றது. கொலைகளைத் தடுக்க சர்வதேச சமூகம் இயலுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். இந்த விடயத்தில் அவர்கள் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அது எந்தவகையில் என்பதை உலக நாடுகள்தான் கண்டறியவேண்டும். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை நிவாரண அமைப்புகள் பட்டியலில் இருந்து பிரிட்டன் நீக்கியது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

என்னதான் மோசமான சம்பவங்கள் இடம்பெற்றாலும் அரசாங்கம் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும். யுத்தத்தின்மூலமான தீர்வை அரசு எதிர்பார்க்கவில்லை. மீண்டும் அமைதி முயற்சிகளுக்கு திரும்புவதற்காக சர்வதேசம் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

- இவ்வாறு நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## உயிரிழந்தோரின் நினைவு நிகழ்வு

தொல்புரம்,ஓக.20

இராணுவத்தினரால் 1995ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 'ட்றகன் பயர்' இராணுவ நடவடிக்கையின்போது ஷெல் தாக்குதல்களால் பலியான தொல்புரம், சுழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த 23 பொதுமக்களின் பத்தாவது வருட நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (9)

## ஆசிரிய ஆலோசகர் பதவிவெற்றிடம்: நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சை

அச்சுவேலி,ஓக.20

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் வலய ரீதியாக நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய் கல்வி வலயத்தை சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

அதேபோல், யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்தமாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறும்.

12 பாடத்துறைகளுக்கு ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஜூன் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றது. இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ''வழிகாட்டல் ஆலோசனையும்'' பாடத்துறைக்கான நேர்முகப்பரீட்சை முடிவடைந்துவிட்டது. ஏனைய 11 பாடத்துறைகளுக்குமான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் ஆசிரிய ஆலோசகர்களாகத் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெறுபவர்களுக்கான நியமனக்கடிதங்கள் உரிய முறையில் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன. (எ-11)

## கலைப்பீட நுண்கலைக் கழக மாணவர்களுக்கான மீள்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.பல்லைக்கழக கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மூன்று வருட மற்றும் நான்கு வருடக்கற்கை நெறியைப் பயின்று அனைத்துப் பிரதான பாட அலகுகளிலும் சித்தி பெற்றும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் சித்தி யின்மையால் பட்டக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யாதுள்ள மாணவர்களிடமிருந்து மட்டும் இரண்டாம் மொழி ஆங்கிலப் பாடத்திற்கான விசேட மீள் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் எதிர் வரும் 22 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு, இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு, மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு ஆகிய மீள்பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மீள்பரீட்சைக் கட்டணமாக 50 ரூபா வீதம் பல்கலைக் கழக காசாளரிடமோ, யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (8-202)

## புலமைப்பரிசில், தகவல் தொழில்நுட்ப பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்

வலி.தெற்கு,ஓக.20

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தர மாணர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பரீட்சை என்பன பரீட்சைத் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்ட முறையில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சைகளுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு இம்முறை மூன்று லட்சத்து 25ஆயிரத்து 595 மாணவர்கள் தோற்றவுள்ளனர். 2 ஆயிரத்து 614 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

12ஆம்ஆண்டு மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கானதேசிய மட்டத்திலான பொதுப் பரீட்சையும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பரீட்சை இம்முறை முதல் தடவையாக தேசிய நிலைய மட்டத்தில் நடத்தப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பரீட்சைகள் ஒத்திவைக்கப்படலாம் என்ற வதந்தி நிலவியமை குறிப்பிடத்தக்கது.(8-152)

## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழா காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 11ஆம் நாளான இன்று சனிக்கிழமை வேல்விழி சுப்பிரமணியத்தின் பாட்டுச் கச்சேரி நடைபெறும்.

வயிலின் - எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் - எம். சிதம் பரநாதன்,கெஞ்சிரா - வி.ரமணன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகக் கலந்துகொள்வர். (204)




## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



பதினொராம் திருவிழா

### நல்லூரான் திருவடி - 5



பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமடி.
*- யோகர் சுவாமிகள்.*

### ஆறுமுகமாக அருளுவாய் அப்பனே....

செந்தமிழர் துயர்தீரச் செய்யுமுகம் ஒன்றே
தேசத்தில் அமைதிநிலை சேர்க்குமுகம் ஒன்றே
சந்ததமும் அன்பர்தமைத் தாங்குமுகம் ஒன்றே
சமராடல் இலையாக்கும் சாந்தமுகம் ஒன்றே
முந்தைவினை ஓடஅருள் மூர்த்தமுகம் ஒன்றே
மோட்சநிலை எய்தஅருள் மூலமும் ஒன்றே
இந்தமுகம் அத்தனையும் ஈய்ந்தருள வேண்டும்
எழிலாரும் நல்லைநகர் எங்கள்பெரு மாளே.
*-வ.சின்னப்பா ,தனங்களப்பு*

### ஈசன் இளவல் இருக்குமிடம் நல்லூரே!

*ஆடுவோம் பாடுவோம் அரகரஒலி எழுப்புவோம்
கூடுவோம் தேடுவோம் கூத்தன்மகன் குமரேசனை
நாடுவோம் போடுவோம் நறுமலரை நாதனடியில்
ஈடு இல்லா ஈசன்இளவல் இருக்குமிடம் நல்லூரே.
கீழ்க்கரவை - செல்லையா வல்லிபுரம்.*

### வளஞ்சேர் தமிழீழம்

*நல்லையிற் கந்தன்
நலந்தரு மானந்தன்
தீல்வினை யாவையும்
நீக்கி - நிலமிதில்
வல்லமை பெற்ற
வளஞ்சேர் தமிழீழம்
மெல்ல மலரவைப்பான் மீட்டு.
அங்குசன்*

### ஊனுருக வாழ்த்தி வணங்குகிறேன்!

சின்னத்திரையும் வேண்டாம்!
சீரழிக்கும் சினிமாவும் வேண்டாம்!
வண்ணமயில் வடிவேல் முருகன்
நல்லூரில் வலம் வரு மழகைக்காண!
பொன்னா பரணங்கள் யொலிக்கும்
பூங்குழல் வள்ளிதேவ சேனா சமேதனாய்
வந்தருள் புரிகின்றான் வடிவேலழகன்!
ஊனுருக வாழ்த்தி வணங்குறேன்!
மாருதி ஆவரங்கால்.

### நல்லூர்க் குமரன் மணியோசை

நல்லூர் குமரன் மணியோசை
தொல்லை வினைகள் தான்துரத்தும் (நல்லூர்)

வல்ல பகையை வென்றொழித்தே
நல்கும் நீதி நேர்மையினை (நல்லூர்)

காலை ஒலிக்கும் மணியோசை
கலைக் கும்மெய்த் தூக்கமதை
பகலில் ஒலிக்கும் மணியதுதான்
புகலும் ஊக்கம் உயரவைக்கும்
வல்லோன் குகனை வழிபடவே
வாரும் வாரும் என்றொலிக்கும் (நல்லூர்)

நேரம் தன்னின் கலைத்துவத்தை
நிறுவிக் காட்டும் ஓசையது
பாரில் உள்ளோர் வழிபடவே
பரிவு காட்டும் ஓசையது
நேரம் வைத்தே வணங்கிடவே
நிமிரச் செய்யும் ஓசையதாம் (நல்லூர்)

தும்பளையூர் நா.வரதராசா



# PRESIDENT CFL

பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்

- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் ISO 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும்.

(38346)(32.15.16)

தொடர்பு: **Light Line,**
580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.


# கண்ணீர் அஞ்சலி



*எமது பாடசாலை ஆசிரியர்*
செவ்வந்திநாதக்குருக்களின் அன்புத் தந்தையார்
**ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாதக் குருக்கள்**
**விஸ்வநாதக் குருக்கள்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**நலன்புரிக்கழகம்**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**
**புத்தூர்.**

(39078) (32-15-16)

# மரண அறிவித்தல்

## சின்னப்பு முருகேசு(பொலிஸர்)
## (பொலீஸ் பென்சனியர்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அவர்கள் நேற்றுமுன்தினம் (18.08.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு- சின்னத்தங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற நெல்லுக்காரக் கந்தையா -ஆச்சிக் குட்டியின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, குணரத்தினம், அன்னம்மா, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அன்னலக்சுமியின் அன்புக் கணவரும் ஜெயமனோகரன் (கனடா), ஜெயதேவி, ஜெயராசா (கனடா),ஜெயஆனந்தன் (கனடா), காலஞ்சென்ற ஜெயகாந்தன் மற்றும் ஜெயமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி (கனடா), குலேந்திரன் (பிறவுண் றோட்), தனலட்சுமி (கனடா),சித்திரா (கனடா),சிறீதரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் கங்காயினி (கனடா), ஜாமினி (கனடா), அனோஜன் (2003 A/L, யாழ். இந்துக்கல்லூரி), அனுசன் (யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவன்), அனித்தியா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெயகாந்தன் (கனடா), திவ்வியா (கனடா),சத்தியா (கனடா), விஜிதரன் (கனடா), அன்புஜா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-08-2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கம்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

பருத்தியோலை,
கந்தரோடை.

(39050) (32-15-16)

# பணியாளர் தேவை

I. சமையல் உதவியாளர் (kitchen helper)
II. உல்லாசப் பயணிகள் விடுதிப் பரிமாறுநர் (Room boy)
III. உணவுப் பரிமாறுபவர் (Waiter)
IV. சிட்டை எழுதுநர் (Bill Clerk)

22.08.2005 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
(அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது)

தொலைபேசி
2222810
OR
0778081680

தொடர்பு:
மில்லேனியம் றெஸ்ரோறன்ஸ்
(கம்பஸ் வீதி)
76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(39079) (32-16-15)

## போக்குவரத்துச் சபை மீண்டும் நிறுவப்படும்

கொழும்பு,ஓக.20

இலங்கை போக்குவரத்துச் சபை மீண்டும் நிறுவப்படவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. போக்குவரத்துப் பிரதியமைச்சர் லசந்த அழகிய வண்ண நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு இந்தத் தகவலை வெளியிட்ட அமைச்சர் தற்போதைய கொத்தணி பஸ் நிறுவனங்களின் முறையை ஒழித்து விட்டு மீண்டும் போக்குவரத்துச் சபையை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது என்று கூறினார். (ஐ-க)

## வேலைக்கு உணவு விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.20

உலக உணவுத் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டுக்கான வேலைக்கான உணவுப் பொருள்கள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு, நல்லிணக்கச் செயலகத்தால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

உரிய வேலைக்கான வரவுப் பதிவினைச் சமர்ப்பித்தவர்களுக்குரிய பொருள்களை வேலணை, கொடிகாமம், புங்குடுதீவு, மருதங்கேணி ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், உலக உணவுத் திட்ட நாவற்குழி களஞ்சியத்திலிருந்து பெற்று உரிய பயனாளிகளுக்கு வழங்குமாறும் -

உரிய பயனாளிகள் அவற்றைக் காலம் தாழ்த்தாது பெற்றுக் கொள்ளுமாறும் மாவட்டச் செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார். (ஒ-202-203)


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.மாவட்ட சித்த ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கண்டி வீதி முருகானந்தா வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202)

# 9 ஆம் மாத நினைவஞ்சலியும்
## 25 ஆவது பிறந்தநாள் நினைவலைகளும்

### வரதராஜக்குருக்கள் அரிகரசர்மா



பிறப்பு
20.08.1980



இறப்பு
14.11.2004



9 மாதங்கள் ஆகிவிட்டாலும் ஆறவில்லை எம் துயரம்
புன்னகைக்கும் உன் சிரிப்பு எங்கே?
உன் குறும்புச் செயல்கள் எங்கே?
எங்களுடன் குதூகலித்த நாள் எங்கே?
உன் அண்ணிமாரோடு குறும்புகள் விடுவாயே
இப்போது எங்கே?
உன் அண்ணாமார், தங்கையோடு
ஐவராய் வாழ்ந்த வாழ்க்கை
ஒரு விரல் முறிந்ததடா!
உன் அப்பா அம்மாவுக்கு நம்பிக்கை நல்கினாய்
உன் வாழ்க்கைக்கு காணி, வீடு, மனைவி
என தேர்ந்தெடுத்தாயே?
இப்போது எல்லாவற்றையும் விட்டு காலன்
உனை கூட்டிச் சென்றானோ?
மணக்கோலம் காணவேண்டும் என்று
நாம் ஆவலுடன் இருந்தோமே
எல்லோரையும் பரிதவிக்க விட்டு சென்றாயோ?
அரி......அரி...... என்று உனை கூப்பிடுவார்களே!
இப்போது யாரும் கூப்பிடுவதில்லையே
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மடத்தடி லேன்,
3 ஆம் கட்டை, கல்வியங்காடு.

(39037) (39-32-15-16)

குடும்பத்தினர்.

## மாமுனை மீனவருக்கு 30 படகுகள்

வடமராட்சி,ஓக.20

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, மாமுனை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு நாளை ஞாயிற்றுக் கிழமை 30 படகுகள் கையளிக்கப் படவுள்ளன.

அமெரிக்க மனித நேய நிதியமும் அமெரிக்காவில் வசிக்கும் செல்வன் வித்தியானந்தன் என்பவரும் நிதி சேகரித்து இந்தப் படகுகளை அன்பளிப்புச் செய்துள்ளனர். (எ-173)


# மதுரை மீனாட்சி அம்மன்



## அருள்வாக்கும் ஜோதிடமும்

**K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி**

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். (காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376) (64-34-18)


# பதவி வெற்றிடம்

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் - யாழ். மாவட்ட அலகினால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) நிர்வாக உத்தியோகத்தர்
நிர்வாகத்துறையில் 5 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்
2) தொழில் நுட்ப உத்தியோகத்தர்
NDT(5 வருட அனுபவம்) அல்லது NCT (10 வருட அனுபவம்)

தகைமையுடையோர் சுயவிவரக்கோவையுடன் 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்,
யாழ்.மாவட்ட அலகு,
G.P.S வீதி, கல்வியங்காடு.

(38975)(32-15-16)

# கணக்காளர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண நகரில் பிரபலமான நிறுவனத்துக்கு கணக்காளர் (ஆண்) ஒருவர் தேவை

முன் அனுபவம் உள்ளவராகவும் 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

சுயவிவர விண்ணப்பத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறதகைமைச்சான்றிதழ், அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் போட்டோப் பிரதிகளுடன் 25.08.2005 இற்கு முன்பதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல: 2671,
மே/பா உதயன்.

(39017)(32-15-16)

# WANTED LOCUM DOCTORS

IoFM attached DCCs, at Chavakachcheri and Jaffna are in need of locum doctors to work on a sessional basis.

- Those who want to take up family medicine as a career or interested in doing research will be benefited.
- Those who are willing to work for the Institute of Family Medicine (IoFM) for a period of 2 years full time or partime equivalant of this duration will be encouraged to do Post - Graduate exams (MD Family Medicine, SL or MRCGP, UK) and also granted an year of UK working experience.
- An attractive remuneration will be paid for the service, which is subject to negotiation.

For further details e-mail to *admin@miot.org.uk*

**INSTITUTE OF FAMILY MEDICINE**
125, Main street Jaffna.

# மூன்றாம் வருட நினைவு அஞ்சலி

செல்வி
**கந்தவனம் தர்ஷிகா**
(மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி)



சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது 25.08.2002

திதி:20.08.2005

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென் கால்
வந்திடுவாய் என்றே தான்
வரந் தந்தனுப்பினரோ?
சிந்தாமணிக் கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

(39013) (32-15-16)

"கவிபோட்டோ"
நவாலி தெற்கு.

**அப்பா, அம்மா,சகோதர சகோதரிகள்**
**உற்றார், உறவினர்கள்.**


விவேகமானவர்கள் விவேகமான முடிவுகளையே எடுப்பார்கள், நீங்கள்?

சர்வதேச தரம், நிபுணத்துவ சேவை என்பவற்றுடன்...

**START**
Diploma courses
Certificate Courses



**Special Course**
**Diploma in Hardware**
**(Night Classes)**

www.stpjaf.com

*For further Details*

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Jaffna., T.P: 2222674.

TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION



இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபம் மங்களபூர்வமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. பிரபல வர்த்தகரான த.கந்தசாமி நாடா வெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் அருளாசியுரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: நேசன்)

## நன்றி செலுத்தும் ஆராதனை



கடந்த 19.07.2005 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**முத்தையா ஞானசிகாமணி**

(ஞானம்)

அவர்களின் வாழ்விற்கு நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (20.08.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆராதனையில் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்
- வெளி 20:12

(39109)(29-13-18)

வை எம்.சி.ஏ. வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய். **-குடும்பத்தினர்.**

## அலுவலகத் திறப்பு விழா

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியிலுள்ள அலுவலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தா.பத்திநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த திருமதி ஞானசிவபாதசுந்தரம் கலந்துகொள்கிறார். (9)


**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடு இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (நிகல்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.) (சி-43360)

**மனோகரா** யாழ்ப்பாணம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

**அந்நியன்**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-44110)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்

**பெப்ரவரி 14**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-43363)


## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

14.08.2005 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தின் 2005 ஆம் ஆண்டின் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவட்டத் தலைவர்: திரு. இராசலிங்கம் பேரின்பநாயகம் (சிறி சுபா பேக்கரி), சுதுமலை.

மாவட்ட உப தலைவர்: திரு. பயஸ் வின்சன் ஜோசப் (தர்ஷன் பேக்கரி), யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலாளர்: திரு. கார்த்திகேசு பாஸ்கரன் (நந்தினி பேக்கரி), கொக்குவில்.

மாவட்ட உப செயலாளர்: திரு.ஜெகதீசன் பாஸ்கரன் (தவம் பேக்கரி), சுன்னாகம்.

மாவட்டப் பரிசோதகர்: திரு.அருணாசலம், செகராஜசிங்கம் (பகீரதன் பேக்கரி), நாவற்குழி, கைதடி.

(சி-44596)(29-13-18)

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். **யா.மா.பே.உ.சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் **வ.செல்வம்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பார்வதி வயிரவி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,வேலணை.**

(39104)(29-13-18)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தையா



வளலாய், இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தையா (கந்தசாமி மாஸ்ரர் - இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் அழகரத்தினத்தின் அன்புக் கணவரும் அழகேந்திரனின் அன்புத் தந்தையும் பூலோகதேவியின் அன்பு மாமனாரும் இந்திரஜித், அனுசியா, சங்கீதா, கலைவாணி, கலையரசி, கலைச்செல்வி, இளங்குமரன், தர்சினி, அருட்செல்வன், செல்வக்குமரன், இளஞ்செழியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.08.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக ஏழாலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.அழகேந்திரன் (மகன்),
பூலோகதேவி.**

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிறேஸ் செல்வமணி சாமுவேல்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறேஸ் செல்வமணி சாமுவேல் அவர்கள் 16.08.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கட்டட ஒப்பந்தகாரர் றெபேட் தம்பிராசா - யென்முத்தம்மா தம்பதியரின் மகளும் ஜெயசிங்கம் சாமுவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தவராசசிங்கம் , தவராஜலெட்சுமி மற்றும் செல்வகுமாரசாமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்ற றெபேட் தேவகிருபை மற்றும் மேரி மாகிறட் தர்மறட்ணம் (I.C.R.C. கொழும்பு தேவதயா - அஞ்சலோ (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாயாரும் பற்றிமா, யசிந்தா, தர்மரட்ணம், அஞ்சலோ ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.08.2005) சனிக்கிழமை 803, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலியின் பின் பூதவுடல் மானிப்பாயிலுள்ள அவர்களின் குடும்ப சேமக்காலையில் (பிப்பிலி) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**யோ.தர்மரட்ணம் (மருமகன்).**

*803, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.* (39107)(29-13-18)

### கனகரட்ணம் ஜெயராஜசிங்கம்

**(உயர்தொழில்நுட்ப நிறுவன சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்)**



ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ஜெயராஜசிங்கம் அவர்கள் 18.08.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் - பரிமளம் தம்பதியரின் புதல்வனும் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகம் -பாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), பவானி, சலெகி, ரட்ணராஜா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோரஞ்சிதம், சரோஜாதேவி, வசந்தகுமார் (வவுனியா), சுதாமதி, ரஜனி, செல்வராணி, பாலசுப்பிரமணியம், அகிலா (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி,
மைத்துனர்கள்.**

*பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
(சந்தையருகில்) யாழ்ப்பாணம்.* (39106)(29-13-16)

### சிவயோகம் கிருஷ்ணசாமி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகம் கிருஷ்ணசாமி அவர்கள் நேற்று (19.08.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா -பாக்கியத்தின் மகளும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவபாதம் மற்றும் சீவரத்தினம் (ஆஸ்திரேலியா), கதிரைமலைராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பெறாமக்கள்.**

*கல்லடி ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.* (சி-44597)(29-13-16)

### தோட்டத்தில் துப்பாக்கி மீட்பு; தொழிலாளி கைது!

நோர்வூட் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா டங்கல்ட் தனியார் தோட்டத்திலிருந்து கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அதனை வைத்திருந்தார் எனக் கூறப்படும் நபர் ஒருவரை மஸ்கெலியா பொலீஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தகவலொன்றின் அடிப்படையில்தான் மஸ்கெலியா பொலீஸார் டங்கல்ட் தோட்டத்தைச் சுற்றிவளைத்தனர். தோட்ட அதிகாரியின் பங்களாவுக்கு அருகில் இருந்து ரிவோல்வர் துப்பாக்கி ஒன்றை மீட்டெடுத்துள்ளனர்.

இத்துப்பாக்கியை மறைத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் அத்தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளியான சுப்ராயன் வடிவேலு (வயது-44) என்பவரைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலிய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூலனி வீரரத்ன தலைமையிலான பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சிவமயம்

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆவணித் திங்கள் 05 ஆம் நாள் நாளை (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.57 மணி முதல் 10.27 மணி வரையுள்ள பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

*எமது சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி*

**பிரவீனா**

அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணைகொண்டு எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்*

திரு. அண்ணாமலை செல்வரத்தினம்
(இ.நு.க. கழகம் யாழ்.பல்கலைக்கழகம்),
திருமதி.ஜெயறோகினி செல்வரத்தினம்.

'ஸ்ரீஜெயா'
இல.38, முதலாம் ஒழுங்கை ,
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்) (39110)(29-13-18)



தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் மூன்றாவது கிளை நேற்றுக் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் மற்றும் போராளிகள் அகவணக்கம் செலுத்துவதையும் இதில் கலந்துகொண்ட பொதுமக்கள் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# அமெரிக்க தூதரக அதிகாரி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

## தயா சந்தகிரியும் கூடவே சென்றார்

கொழும்பு,ஓக.20

அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் ஜேம்ஸ் ஈ ஒஷ்லேயுடன் இலங்கைக் கடற்படைத் தளபதியும் படைகளின் பிரதம அதிகாரியுமான தயா சந்தகிரி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சென்றார்.

இதன்பின்னர் சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கோட்டே கொடயும் யாழ்ப்பாணம் சென்றுள்ளார்.

அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையிலிருந்து நாகர்கோயில் வரையிலான பாதுகாப்பு நிலைகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அதுதவிர, அவர் சிறிலங்கா கடற்படை முகாம்களுக்கு விஜயம் செய்தார். இரு தளபதிகளும் யாழில் உள்ள படையினர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர். (எ-க)

# ஐ.தே.க. கையெழுத்து வேட்டை வடக்கு - கிழக்குக்கும் விஸ்தரிப்பு

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்துள்ள மக்களிடமிருந்து கையெழுத்துப்பெறும் நடவடிக்கை வடக்கு- கிழக்கிற்கும் விஸ்தரிக்கப்படுகிறது.

அதன்படி, நேற்று மட்டக்களப்பில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை ஆரம்பமானது. இது திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட வடக்கு - கிழக்கின் பல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என மட்டக்களப்பில் இம்முயற்சியில் ஈடுட்டுக்கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கையெழுத்துப் பெறும் நடவடிக்கை நேற்று மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் பல இடங்களிலும் நடைபெற்றது.

கோட்டை அம்புல்தெனியப் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தலைமையிலும் வத்தளைப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தலைமையிலும் இது நடைபெற்றது.

இதுவரை 17 லட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளன என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இவற்றுடன் சேர்த்து இனிப் பெறப்படும் கையெழுத்துக்களையும் தேர்தல் ஆணையாளரிடம் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (எ-க)

# சந்நிதியில் நேற்று பக்தர் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஓக. 20

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தீர்த்தத் திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் நேற்றைய தீர்த்தத் திருவிழாவில் கலந்துகொண்டு தீர்த்தமாடி தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றிக்கொண்டனர்.

பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பறவைக்காவடி, தூக்குக்காவடி மற்றும் இழுவைக் காவடி எடுத்தும் பாற்குடம், கற்பூரச்சட்டி ஏந்தியும் சந்நிதிவேலனை வழிபட்டதைக் காணக் கூடியதாகவிருந்தது.

ஆலயத்தைச் சூழவுள்ள மடங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தாகசாந்தி நிலையங்களில் தாகசாந்தி வழங்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும் தனியார் சிற்றூர்திச் சங்கத்தினரும் விசேட பஸ்சேவைகளை ஒழுங்கு செய்திருந்தனர்.

தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பக்தர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் சந்நிதி ஆலயத்தில் கூடியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (எ)

### மூத்த இராஜதந்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கடந்த அரசின் காலத்தில் அழைக்கப்பட்ட இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஷ் நம்பியாரின் சகோதரரே விஜய் நம்பியார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-க)

### தனபால - ஹெலண்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்துள்ளனர் எனக் குறிப்பிட்ட ஹெலண்ட், ஒப்பந்தத்தை முறையாக நடைமுறைப்படுத்துவது பற்றி புலிகளின் ஆலோசனையை அரச சமாதானச் செயலகத்துடன் ஆராயவுள்ளார் எனவும் மேலும் கூறினார். (எ-க)

### சுதந்திரக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

22 ஆம் திகதி உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்னர் சுதந்திரக் கட்சி தனது யாப்பைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இந்த விவகாரம் குறித்து தனக்கு நெருக்கமான அமைச்சர்கள் சிலருடன் ஜனாதிபதி நேற்றுமுன்தினமிரவு பேச்சுகளை நடத்தியுள்ளார். (எ-க)

### யாழில் கைதுசெய்யப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட கோபி தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகின்றார். சந்தேகநபருக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்குப் பாதுகாப்பு வழங்குமாறு புலனாய்வு அதிகாரிகள் கேட்டுள்ளனர். யாழ். பொலிஸ் அத்தியட்சகரின் கொலையில் 17க்கும் மேற்பட்டோர் தொடர்புபட்டுள்ளனர் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

அதேசமயம், புலிகளின் உயர்மட்டத்தைச் சேர்ந்தோரே பொலீஸ் அதிகாரி விஜேயவர்த்தனவை கடத்திக் கொல்வதற்கு உத்தரவிட்டனர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள போராளியான கோபி ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலில் நேரடியாகப் பங்குகொண்டவர் என்று புலனாய்வு அதிகாரிகள் கூறுகின்றனர். பூநகரிச் சண்டையில் அவர் தனது ஒரு கையை இழந்துள்ளார் என்றும் அவர்கள் கூறினர்.

சந்தேக நபரான கோபியை நேற்றுமுன்தினம் பொலீஸார் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர். பின்னர் தொடர்ந்து அவரைத் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

இதேவேளை, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்குச் சென்று கோபியைப் பார்வையிட்டுள்ளனர். அவரது தந்தையார் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். (எ-க)

# ஒப்பந்த நடைமுறையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர் ஜான் பீற்றர்சனும், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனும் நாடு திரும்பும் வழியில், கடந்த புதன்கிழமை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேசினர். அப்போதே போர் நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இரு தரப்பினரும் நேரில் சந்தித்துப் பேசும் யோசனை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இது தொடர்பாக அன்ரன் பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் தலைமைக்கு அறிவித்தார்.

நோர்வேயின் அழைப்பை புலிகளின் தலைமை ஏற்றுக்கொண்டுள்ளது என்று இப்போது பாலசிங்கம் அந்த நாட்டுப் பிரதமருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். ''போர் நிறுத்த உடன்படிக்கையை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நடைமுறைச் சாத்தியமான வழிகளை மீளாய்வு செய்வதற்காக பேச்சில் புலிகள் பங்கேற்கவுள்ளனர்'' என்று பாலசிங்கம் 'உதயன்'க்குத் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் அரசு, புலிகள் இரு தரப்பில் இருந்தும் உயர்மட்டக் குழுக்கள் இந்த நேரடிச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளன. நோர்வே இதற்கு அனுசரணை வழங்கும். பேச்சுக்கான திகதி குறிப்பிடப்படாத போதும் இரு வாரங்களுக்குள் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று தெரிகின்றது. பேச்சுகளில் கலந்துகொள்பவர்களின் விவரங்களும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, ''கதிர்காமரின் கொலையால் ஏற்பட்ட பின்னடைவிற்குப் பின்னர் வந்திருக்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இது'' - என்று பேச்சுப்பற்றிக் கருத்துத் தெரிவித்தார் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன். அரசு - புலிகள் இரு தரப்பினருமே பேச்சுக்கு இணங்கியுள்ளனர் என்று அவர் உறுதிப்படுத்தினார். பேச்சுகளில் இராணுவ மற்றும் அரசியல் துறைகளைச் சார்ந்தோர் பங்கேற்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தப் பேச்சு போர்நிறுத்த உடன்படிக்கை குறித்தது மட்டுமே என்று கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது. ''இது சமாதானப் பேச்சுகளின் மீள் ஆரம்பம் அல்ல'' என்றார் தூதரக அதிகாரி டொம் கனப்ஸ்கொக். (எ-க)

### புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


யும், அவற்றைக் கையாளும் உண்டியல் காரர்களையும் மடக்கிப் பிடிக்க பல இரகசியத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகின்றது.

பயங்கரவாத அமைப்புக்களுக்காக நிதி சேகரிப்பதையும், வெளிநாடுகளில் இருந்து பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வருவதையும் தடுப்பதற்கான சட்டம் ஒன்று கடந்த ஜூலை மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தைக் காலஞ்சென்ற அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதையும் அரசு தீவிரப்படுத்தவுள்ளது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் பதவி இன்னும் நிரப்பப்படாமலேயே இருக்கின்றது என்றும் - இப்பொறுப்புகள் வெளிவிவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் - தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (19.08.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் வேலங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை (39112) (29-18-34)


தகவல்:
ந.சிறி (மகன்).

யூனிவேசல்
யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகில்
புவியியல்
A/L 2006 வரைபடங்கள்
A/L 2007 இடவிளக்கவியற் படங்கள் அமைத்தல்
By: திரு.பாபு
புதிய அனுமதிகள் வழங்கப்படும். (39095)

VCD Songs, ACD, MP3, Commedy CDs, Cartoons, Softwares, Clip Arts, Learning CDs (Burned CDs) 60/=
STR 81, பலாலி வீதி, கந்தர்மடம். (39092)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை திருநாவுக்கரசு



சங்கரத்தை, துணைவியைச் சேர்ந்த சின்னத்துரை திருநாவுக்கரசு (திருநாமம்) அவர்கள் நேற்று (19.08.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.08.2005) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஒருமணிக்கு வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துணைவி,
சங்கரத்தை. (39113) (29-18-34)

தகவல்:
தி.கோகுலதாசன் (மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.